★ விலை ரூபா1 - 25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 கார்த்திகை 15 டிசம்பர் 25 இதழ் 290
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 1 12 83

## 'யுனிசெவ்' உதவி திட்டத்தில்
### யாழ். மாநகரசபையும் இடம்பெற்றது!
### பாரிய திட்டங்கள் நிறைவுபெறும்

(யாழ்ப்பாணம்)
'யுனிசெவ்' உதவித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாநகரசபையும் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு ஆர். பிரேமதாசா யாழ்ப்பாணமாநகரசபையையும் இத்திட்டத்தில் சேர்க்கும்படி வலியுறுத்தியிருந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இத்திட்டத்தின்படி யாழ். நகரில் நெருக்கமான குடிசனமுள்ள பின்தங்கிய பகுதிகளை அபிவிருத்திசெய்ய நிதியுதவி கிடைக்கும். 84ம்ஆண்டு ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் 5 வருடங்களில் செயற்படும்.

பாஷையூர், குருநகர், நாவாந்துறை, பொம்மைவெளி, முஸ்லிம் பகுதி ஆகியவை இத்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு.சீ. வீ. கே சிவஞானம் நேற்றுக்காலை கூட்டிய அவசர மாநாட்டில் சுகாதாரப் பகுதியினரையும், வேலைப்பகுதியினரையும் இத்திட்டத்திற்

(8-ம் பக்கம் பார்க்க)

### "இலங்கைத் தமிழர் பிரச்னை உயர்மட்டப் பேச்சுக்கள்:

# இன்றைய விடிவுக்குக் காரணம் தமிழ் இளைஞர்களின் தியாகமே!

## உயிரைக்கொடுத்து அவர்கள் போராடுகிறார்கள்!!"

### "ஈழநாடு"க்கு தொண்டமான் பேட்டி

(இ கந்தசாமி)

"தமிழ் இளைஞர்களின் சக்தி மிகப் பெரியது. பலரும் நினைப்பதுபோல் அவர்கள் அறிவு கெட்டவர்கள் அல்ல. தங்களது உரிமைக்குக் குரல் கொடுக்கின்றார்கள். தங்களின் உயிரைக் கொடுத்துப் போராடுகின்றார்கள். அவர்களின் உண்மையான தியாகத்தினால் தான் இலங்கைத் தமிழர் பிரச்னை விசுவரூபமெடுத்ததே தவிர, தலைவர்கள் நடத்திய அரசியலால் இந்த நிலை உருவாகவில்லை!" என்று கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், 'ஈழநாடு' பத்திரிகைக்கு நேற்று மாலை அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றிய உயர்மட்டப் பேச்சுக்களில் கலந்து கொண்டுவிட்டு நேற்று முன்தினமிரவு நாடு திரும்பிய அமைச்சர் திரு.எஸ். தொண்டமான், நேற்றுமாலை ஆறு மணியளவில், பாராளுமன்றத்திலுள்ள அவரது அமைச்சரவை அலுவலகத்தில் 'ஈழநாடு'வுக்கு பேட்டி அளித்தார்

"இலங்கைத் தமிழர்பிரச்னை குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எதிர்பாராத முன்னேற்றங்கள் மிகவிரைவாகவே ஏற்பட்டதும், இணக்கம் காணப்பட்டதும் பெரிய வெற்றி என்றுதான் சொல்லலாம்." என்ற பெருமிதத்துடன் பேட்டியை ஆரம்பித்த அமைச்சர் தொண்டமான்;

"இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஜனாதிபதியும் நடத்திய பேச்சுக்கள் மிகவும் ஆரோக்கியமானவை. திரு பார்த்தசாரதியின் ஆலோசனைகள் நிறைவேற்றப்படும்பட்சத்தில், இலங்கைத் தமிழரின் அபிலாஷைகள் பூர்த்திபெறும் என்று நம்பலாம்" என்று கருத்து வெளியிட்டார்.

#### ஒரே ஒரு பிரச்னை

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைக்கும், ஜனாதிபதியின் நிலைக்குமிடையேஒரே ஒரு பிரச்னைதான் காணப்படுகிறது. இந்த முட்டுக்கட்டையும் சுமுகமான முறையில் தீர்க்கப்படலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்று கூறிய அமைச்சர் கூட்டணியின் நிலையை விளக்கினார்.

"வடக்கு கிழக்கு மாகாணங்களை தனித்தனி மாநிலங்களாகப் பிரிக்காமல், இரண்டு மாகாணங்களையும் ஒரே மாநிலமாக்கி மாநில சுயாட்சி அமைக்கவேண்டும் என்பதுதான் கூட்

(8-ம் பக்கம் பார்க்க)

## இடைத் தேர்தல்
### வடக்கிலும் நடக்கும்?

(யாழ்ப்பாணம்)
வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கூட்டணி எம்.பிக்களின் 14 தொகுதிகளுக்கும் உபதேர்தல்கள் நடைபெறும்.

திருகோணமலை, வவனியா, மானிப்பாய்த் தொகுதி எம்.பி.க்கள் 3 மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்றம் செல்லாததினால் காலி இடங்கள் ஏற்பட்டன.

சட்டப்படி இம்மூன்று தொகுதிகளுக்கும் ஒரு மாத காலத்திற்குள் கூட்டணி செயலாளர்நாயகம் திரு.அ.அமிர்தலிங்கம் புதிய அபேட்சகர்களை நியமிக்காததினால் இத்தொகுதிகளில் உபதேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. திருகோணமலை உபதேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 8ம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும்.

மற்றும் 11 தொகுதிகளான நல்லூர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, உடுப்பிட்டி, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, முல்லைத்தீவு, மன்னார், பட்டிருப்பு எம். பி.க்கள் 3 மாதங்கள் பாராளுமன்றம் செல்லாததினால் காலி இடங்கள் ஏற்பட்டன.

கூட்டணி எவரையும் நியமிக்காததினால் இந்தப் பதினொரு தொகுதிகளுக்கும் உபதேர்தல்கள் நடைபெறும்.

கோப்பாய், பருத்தித்துறை தொகுதி எம்.பி.க்கள் டிசம்பர் 27ம் திகதிவரை பாராளுமன்றம் செல்லாவிட்டால் அதன்பின் இரு தொகுதிகளிலும் காலி இடம் ஏற்படும். ஒரு மாத காலத்தில் கூட்டணி எவரையும் நியமிக்காவிடில் இவ்விரு தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும்.

இதே நேரத்தில் வாக்களிப்பு நிலையங்கள் குறித்து அறிக்கை

(8ம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் இறுதிமுடிவு
### பார்த்தசாரதியிடம் தெரிவிக்கப்பட்டது
### ஜனாதிபதி இன்று நாடு திரும்புகிறார்

(புதுடில்லி)
இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்கு இந்தியா எடுத்துவரும் முயற்சிகளின் தொடர்ச்சியாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி பார்த்தசாரதி நேற்று புதுடில்லியில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவுடனும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

திரு. ஜெயவர்த்தன தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை நேரடியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தாத போதிலும், திரு. பார்த்தசாரதியினூடாக இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான கூட்டணித் தலைவர்களின் கருத்தை அறிந்து வருகின்றார்.

நேற்று முன்தினமிரவு திரு. பார்த்தசாரதி தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர்களைச் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டார்.

அதன் பின்னர் திரு பார்த்தசாரதி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நடத்திய பேச்சுக்களின்போது, கூட்டணித் தலைவர்களின் கருத்துக்களை அவரிடம் தெரிவித்ததாக அறியவருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களை நேற்று மீண்டும் சந்தித்த திரு. பார்த்தசாரதி ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துக் கூறினாரெனத் தெரியவருகிறது.

**இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இறுதிப் பதிலை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சூசகமாகத் திரு. பார்த்தசாரதியிடம் நேற்றுத் தெரிவித்து விட்டதாக டில்லியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.**

தனிநாடு கோரிக்கையைக் கைவிடத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இணங்கியுள்ள போதிலும், தமிழ் மாநிலங்களுக்கு அ

[8-ம் பக்கம் பார்க்க

### இலங்கைத் தமிழர் பிரச்னை சென்னையில் மாநாடு

சென்னை, நவ. 30
இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான மகாநாடொன்று எதிர்வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் சென்னையில் நடைபெறவுள்

(8-ம் பக்கம் பார்க்க)

## தென்னைமீது கைவைக்க தடைவிதிப்பு!

[கொழும்பு]
தென்னை மரங்களைத் தறித்தல், மற்றும் இளநீர், தென்னம் பாளைகள், தென்னம் குருத்துக்களைவெட்டுதல் ஆகியவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளரும், ராஜாங்கஅமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

மாநகரசபை, நகரசபைப் பகுதிகளுக்குள் இளநீர் எடுத்துச் செல்வதற்கும் மூன்று மாதங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், செவ்விளநீர் விற்பனைக்கு விதிவிலக்களிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [வெ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கில் பலாலி வீதியில் கோண்டாவில் டிப்போவிற்கு முன்பாக 3½ பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு: N. ஞானம்பிகை, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. 10266

---

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம்: S. S. அபூபக்கர் அன் கோ, 112, கே கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (10252)

---

புத்தம் புதிய நிலையிலுள்ள வீடியோ NV 777 உடனடி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சந்திரமோகன், றிச்சாட் லேன், கோப்பாய். (கிறீஸ்தவ கல்லூரிக்கு அருகாமையில்). 10262

---

கொம்பிறசர், வல்கனைசிங் மெசின் (மின்சாரத்தில் இயங்குவது) மற்றும் சைக்கிள் கடை நடத்துவதற்குரிய சகல கருவிகளும் இருக்கின்றது. விபரங்களுக்கு தொடர்பு: சி. நித்தியானந்தராசா, பலாலி ரோட், கோண்டாவில் அல்லது சுதுமலை மேற்கு, மானிப்பாய் 10257

---

10/7 சிவன் கோவில் வீதி, திருநெல்வேலியில் நான்கு அறை உள்ள வீடு விற்பனைக்குண்டு. மேல்காணும் விலாசத்தில் அல்லது R. ஜயேந்திரன், 96, அம்பலவாணர் வீதி அத்தியடி. யாழ்ப்பாணத்தில் உடன் தொடர்பு கொள்ளவும். 10270

---

3 பரப்பு காணி கட்டப்பிராய், கோப்பாய் தெற்கில் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு சந்தைக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு "ஷப்ரு" 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி. இல: 22073. (10143)

---

வேலணை, வங்களாவடி புங்குடுதீவு ரோட்டில் இரண்டு கடைகள், பேக்கறி, வேம்பு, பனைகளுட்பட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்) விபரங்கட்கு க காங்கேசு 10/5 சிவன்கோவில் வீதி திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 10145

---

அளவெட்டி வடக்கில் நல்ல சுற்றுடலில் உள்ளதும், கருவப்புலம் பாடசாலைக்கு அருகாமையில் உள்ளதுமான கல்வளவு என்றழைக்கப்படும் வீடு கட்டுவதற்குகந்த கிணற்றுடன் கூடிய ஏழு 7) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மின் வசதி பெறக்கூடிய வசதியுமுண்டு. சு. நடேசலிங்கம், அம்பாள் ஸ்ரோஸ், வல்லைவீதி- சங்கானை. 10176

---

'நாலாயிரம் தொடர்பிலக்கமுள்ள மொரிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. புதன் கிழமையிலிருந்து நல்லூர் செட்டித்தெரு. இல. 8 இல் பார்வையிடலாம். 10235

## சேவை

புதிய பழைய படங்கள் [illegible]ரிவந்துள்ளன. இன்றே [illegible] துவம் பெறுங்கள் [illegible] வீடியோ கிளப். 135, [illegible] ரியார் வீதி யாழ்ப்பா 10269

## தேவை

சகலவசதிகளும்கூடிய வீடு தேவை. பஸ்நிலையம், சந்தைக்கும் வண்ணார்பண்ணைக்கும் அண்மையில் கன்னாதிட்டி ரோட், கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுவீதி விரும்பத்தக்கது. 400—600 க்குள் வாடகையும், முற்பணமாக தகுந்த தொகையும் கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். 135, கன்னாதிட்டிரோட், யாழ்ப்பாணம். 10245

---

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் உடன் தேவை. இருபது வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. நேரில்வரவும். A. சுப்பையா அன் கோ, 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10249

---

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவமுள்ள விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை (ஆண்கள் மட்டும்). கல்விப் பொதுத்தராதரம் (சாதாரணம்) பரீட்சையில் சித்தி பெற்றவராயும், ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல கையெழுத்துடையவராயும், நாற்பது வயதுக்குட்பட்டவராயும், இருத்தல் வேண்டும். தகமைகள், அனுபவங்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து 8-12-83 க்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல. 10221, ஈழநாடு மே/பா., யாழ்ப்பாணம். (10221)

---

### WANTED

Equipment for food processing industry new or second-hand. Send details R. Manivannan, 184, Manipay Road, Vannarponnai, Jaffna. 10264

## தவறிவிட்டது

71 சிறி 7396 இலக்க குவாட்டா லான்ட்மாஸ்ரர் இயந்திரத்தின் புத்தகம் 2 கிழமைக்கு முன்னர் மல்லாகத்தில் தவறிவிட்டது. கண்டு எடுப்போர் தயவுசெய்து ஒப்படைக்கவும் அல்லது தகவல் தரவும். வே. செல்லத்துரை, நீதிமன்ற வீதி, மல்லாகம். 10259

## வாடகைக்கு

கே. கே. எஸ். வீதி, சி. எஸ். கே. சந்திக்கருகில் தொலைபேசி வசதியுடன் ஹோட்டல் அல்லது வேறு எந்த வியாபாரமும் உடன் ஆரம்பிக்கக்கூடிய கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் 10273

## காணவில்லை

பொகவந்தலாவையைச் சேர்ந்த சங்கர் அல்லது இராஜகுமார் என்றழைக்கப்படும் 15 வயதுச் சிறுவனை கடந்த மார்ச் மாதம் தொடக்கம் காணவில்லை. அவரைக் கூட்டிச்செல்ல தகப்பனார் முருகன் இவ்விடம் வந்துள்ளார். தாயாரும் மகனைக் காணவில்லை என்ற ஏக்கத்தினால் சுகவீனமுற்று படுக்கையில் இருக்கிறார். இவரைப் பற்றி தகவல் தருவோர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: N. மகேஸ்வரன், இராமலிங்கம் வீதி. திருநெல்வேலி. 10251

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

## வெற்றிடங்கள்
(NURSES)

நெல்லியடியிலுள்ள தனியார் வைத்தியநிலையம் ஒன்றுக்கு முற்றான பயிற்சியுடையதாதிகள் (இருபாலாரும்) தேவை.
முழு விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.
RATNAM PRIVATE NURSING HOME
நெல்லியடி — கரவெட்டி (10265)

---

## பெண் காசாளர் தேவை

ஆங்கிலத்தில் க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் சித்திபெய்தியவர்கள் சான்றிதழுடனும சமீபத்தில் எடுத்த புகைப்படத்துடனும் விண்ணப்பிக்கவும்.
பிறின்ஸ் படப்பிடிப்பாளர், சுன்னாகம்
என்ற முகவரிக்கு 10-12-83இற்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும்.
அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னிரிமை உண்டு.
(10258)

---

## ENGLISH BY POST

வீட்டில் இருந்தபடியே விரைவாகவும் இலகுவாகவும் ஆங்கிலம் படிக்கவேண்டுமா?
தொடர்பு கொள்ளுங்கள்:
**மல்ரி சேவிசஸ்**
37 (351) மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்தி), யாழ்ப்பாணம்.
(10274)

---

## பகிரங்க ஏல விற்பனவு

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
சிலிங்கோ ஹவுஸ், ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1
கிளைக் காரியாலயம்:-
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். — வழக்காளி

வழ. இல. காசு/1235

எதிராக

1. யோசேப் சத்தியதாஸ்.
   இல. 29, சோமசுந்தரம் அவனியூ
   யாழ்ப்பாணம், தற்போது 42/4, கோவில் வீதி,
   சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. நடேசு சின்னத்துரை,
   நெல்லியடி, கரவெட்டி.
3. ஆழ்வாப்பிள்ளை முருகேசு,
   பாக்கியமலர், வதிரி, கரவெட்டி.

எதிராளிகள்

மேற்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பற்றாணையினால் பதிவாளரும் பிஸ்கால் அதிகாரியும் ஆகிய குமாரவேலு குலசிங்கம் ஆகிய எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு இவ்வழக்குச் சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட பின்வரும் விபரங்களைக்கொண்ட (2) இரண்டு வாகனங்களையும் 1983-ம் வருடம் மார்கழி மாதம் 21ம் (21-12-1983) திகதி முற்பகல் 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனவு செய்து மேற்கூறிய வழக்காளிக்கு உரிய வட்டி முதல் வழக்குச்செலவும் மற்றும் செலவுகள் யாவும் அறவிட்டுக் கொடுக்கப்படும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

1983-ம் வருடம் கார்த்திகை மாதம் 25ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்

பதிவாளர்/பிஸ்கால் அதிகாரி.

மேற்குறிப்பிடப்பட்ட வாகனங்கள் விபரம்:
1. 27 ஸ்ரீ 1730 இசுசு 150 டீசல்
2. 84 ஸ்ரீ 5123 'கொண்டா' 50 மோட்டார் சைக்கிள்.

10275

---


## இரும்புப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன

- இறக்குமதிசெய்யப்பட்ட உருண்டைக் கம்பிகள்
- முறுக்குக்கம்பிகள், கல்வனைஸ்ட் பைப்புகள்
- இணைப்புப் பொருட்கள் (G-FITTINGS)
- இறக்குமதிசெய்யப்பட்ட அரத்தாள்கள் (SANDPAPERS)
- ஊத்தைச்சோடா (50 Kg.) பைக்கற்றுகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு விலை 150-00 முதல் 800-00 வரை

**கதிர் ஹாட்வெயர்ஸ்**
KATHIR HARDWARES
(இல. 11/1, மொம்சாக் கட்டிடம்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 23130 (10_47)


---

## அகதிகள் முகாமில் இளைஞர் அட்டகாசம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள அகதி முகாமொன்றில் வெளியில் இருந்துவந்த இளைஞர்கள் சிலர் அகதிக்குடும்பமொன்றினைத் தாக்கமுற்பட்டதுடன் அக்குடும்பத்தை முகாமை விட்டு வெளியேறுமாறு எச்சரித்தும் சென்றனராம்.

அகதிமுகாமில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட அகதிக்குடும்பத்தலைவர் கிளிநொச்சிப் பொலிசில் முறைப்பாடுசெய்துள்ளார்.

இப்புகார் தொடர்பாக விவசாய உத்தியோகத்தர் ஒருவர் உட்பட மூன்று இளைஞர்களைத் தேடி கிளிநொச்சிப் பொலிஸ் நிலைய சார்ஜன் சுப்பிரமணியம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி வலைவிரித்துள்ளது.

---

## பிறந்ததின வாழ்த்து



### வசீகரன்

கந்தர்மடம் இந்து மகளிர் வீதி, மகாலிங்கசிவம் விமலாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வன் வசீகரன் முதலாவது பிறந்த தினத்தை இன்று கொக்குவிலில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரிய மாமா குடும்பம், பெரியப்பா குடும்பம், பெரியம்மா குடும்பம், அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், சித்தி, மற்றும் உற்றார், உறவினர்களும் இறைவனருளால் சகல கலைகளையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

(10243)

# சிறிய நாடுகளின் உள் விவகாரங்களில் வல்லரசுகளின் தலையீடு!

## காமன்வெல்த் கண்டனம்

புதுடில்லி,

சிறிய நாடுகளின் உள் விவகாரங்களில் வல்லரசுகள் தலையிடுவது குறித்து காமன் வெல்த் தலைவர்கள் உச்சி மகாநாடு கண்டனமும் கவலையும் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற மகாநாடு நேற்று முன்தினம் முடிவடைந்தது. மகாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் மேற்கண்டவாறு கவலை தெரிவிக்கப்பட்டது.

சைப்பிரசில்துருக்கியர்களின் சுதந்திரப் பிரகடனத்தையும் அறிக்கை கண்டித்துள்ளதுடன் ஒருதலைப் பட்சமான இந்தப் பிரகடனத்தை ஏற்க வேண்டாம் என்று சகல நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நமீபியாவுக்கு சுதந்திரம் கிடைப்பதை விரைவுபடுத்த வேண்டும் என்றும் கிரெனடாப் பிரச்னைகுறித்தும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# பங்காளதேஷில் ஊரடங்கு: மீறுவோர் சுடப்படுகின்றனர்

டாக்கா, நவ 30

பங்காளதேஷின் முக்கிய நகரங்களில் தொடர்ந்து பதட்டம் காணப்படுகிறது டாக்கா நகரில் ஊரடங்குச் சட்டம் தீவிரமாக அமுல் நடத்தப் படுகிறது.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்கள் சுடப்படுவார்கள் என்று இராணுவ ஆட்சியாளர்கள் வானொலிமூலம் அடிக்கடி அறிவித்துக் கொண்டிருக்கின்றனர். பலர் சுடப்பட்டுள்ளனர்.

இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையே மோதல்கள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் ஊர்வலங்கள், கூட்டங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்குவதற்கு வசதியாக மூன்று மணித்தியாலங்கள் ஊரடங்கு தளர்த்தப் படுகின்றபோதிலும் அப்போதும் நான்கு பேருக்கு மேல் கூடுவது தடைவிதிக்கப்பட்டுள்ளது. (கு)

## அமெரிக்கத் தூதுவராக வாஜ்பாய்

(புதுடில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. வாஜ்பாய் அமெரிக்காவுக்கான அடுத்த இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் அதிக அக்கறைகாட்டி வந்த திரு. வாஜ்பாய், இப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதற்கான சமரசப் பேச்சுவார்த்தைகளில் திருமதி இந்திரா காந்திக்கு உதவியாக கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# "நமீபியா விடுதலைக்கு நடவடிக்கை வேண்டும்"

## ஐ. நா. விடம் உலகத் தலைவர்கள் கோரிக்கை

நியூயோர்க், நவ 30

நமீபியாவுக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு ஐ. நா. சபை விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பல உலகத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நமீபிய பிரச்னை தொடர்பாக ஆராய்வதற்காக ஐ. நா. சபை கூடியபோது அங்கு உரையாற்றிய தலைவர்கள் இவ்வாறு வேண்டுகோள்விடுத்தனர்.

அங்கோலாவிலுள்ள துருப்புக்கள் வெளியேறும் வரை நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்க முடியாது என தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளதை வன்மையாகக் கண்டித்த தலைவர்கள் இரு பிரச்னைகளையும் ஒன்றிணைக்க முடியாது என்று தெரிவித்தனர். (கு)

# சோவியத்யூனியன்மீது முதல்

## அணு,ஆயுத தாக்குதல் நடக்குமாம்

புதுடில்லி, நவ 29

ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியங்களில், ராணுவத் தளங்கள் அதிகரித்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1980-ல் மேற்கு பசுபிக்கில் மட்டும் 1,40,000 அமெரிக்கத் துருப்புக்கள் இருந்தனர் என்றும் ஆனால் 1982-ல் அவர்களின் எண்ணிக்கை 1,47,500 ஆக உயர்ந்தது என்றும் பசிபிக்கிலுள்ள அமெரிக்கக் கடற்படை மேலும் வலுப்படுத்தப் பட்டு, ஏவுகணைகளைக் கொண்ட ''நியூஜெர்சி'' என்றும் நவீன போர்க் கப்பல், ''கார்ல் வின்சன்'' என்னும் மிக நவீன அணு ஆயுத விமானந் தாங்கிக் கப்பல் ஆகியவை சேர்க்கப்பட்டு அமெரிக்கக் கடற்படையில் 50 சதவிகிதம், பசுபிக் பிராந்தியத்தில் குவிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லக்கூடிய 36 ''எஃப்-16'' போர் விமானங்கள் அண்மையில் தென் கொரியாவில் வைக்கப்பட்டன. இதுபோன்ற 48 விமானங்கள், ஜப்பானிலுள்ள மிசாவா தளத்தில் வைக்கப் படும். அந்தப் பிரதேசத்தில் 440 விமானங்களை அமெரிக்கா வைத்துள்ளது. அவற்றில் கணிசமான பகுதி, அணு ஆயுதப் போர் நடத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சோவியத் அச்சுறுத்தல் என்றும் (ஜப்பான் மற்றும் தென் கொரியா) பாதுகாப்புக்கு'' என்ற வாதமும் முன்வைக்கப் பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஆசியா பசிபிக் பிராந்தியத்தில் தவிர ராணுவத் தயாரிப்புகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரத்தில்சோவியத் யூனியனுக்கு எதிரான அணு ஆயுதப்போருக்காகவே அந்தப் பிராந்தியத்தில் ஆயுதங்கள் குவிக்கப்படுவதாக அமெரிக்க ராணுவ நிபுணர்கள் வெளிப்படையாக கூறியுள்ளனர் என்று மாஸ்கோ உத்தியோக பூர்வமாகக் கூறுகிறது.

சோவியத் யூனியன் மீது முதலாவது அணு ஆயுதத் தாக்குதல் நடைபெறும் என்றும், அப்போது ராணுவ தளமாகச் சைபீரியா மாற்றப் படும் என்றும். அந்த ராணுவ நிபுணர்கள் கூறியுள்ளனர்.

# அமெரிக்காவின் புதிய 'கூட்டணி'

மாஸ்கோ, நவ 29

''தனது ராணுவத் திட்டங்களை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஆட்சியாளர்கள், தலைதெறிக்கப் பாய்ந்தோடும் பந்தயக்காரர்களைப் போல, எல்லாத் தடைகளையும் தகர்த்துத் தமது விருப்பத்தைச் செயல்படுத்த முனைந்துள்ளனர்'' என்று ''பிராவ்தா'' எழுதியுள்ளது.

ஜனாதிபதி ரீகனின் தூர கிழக்கு விஜயம் பற்றி எழுதும் 'பிராவ்தா' மேலும் கூறுவதாவது: தம்மைப் போலவே தமது கூட்டாளிகளும் போர்த் தயாரிப்புகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர், அமெரிக்க ஜனாதிபதி ரீகன் ஜப்பானுக்கும், தென் கொரியாவுக்கும் அண்மையில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் நோக்கம் இதுதான். நேட்டோ கூட்டணியைப் போல் அமைக்கப் படவிருக்கும் ''வாஷிங்டன்—டோக்கியோ—சியோல்'' கூட்டணியானது. திட்டவட்டமான தன்மைகளைக் கொண்டதாகும்.

''நிகரகுவா புரட்சிக் குடியரசின்மீது அமெரிக்காவின் பகிரங்க ராணுவத் தலையீடு நிகழக்கூடும். அமெரிக்க அயல்துறை அமைச்சகத்தின் அறிக்கை, இதை நேரடியாகக் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் மத்திய கிழக்கில் இருந்தும் கவலையளிக்கும் செய்திகள் வருகின்றன. பெருந்துயரில் மூழ்கியிருக்கும் லெபனனில்' அமெரிக்க, இஸ்ரேலியப் படைகளின் அட்டூழியங்கள் நீடிக்கின்றன. 30 போர்க் கப்பல்களைக் கொண்ட அமெரிக்கக் கடற்படை, லெபனனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. லெபனன் தேசிய சக்திகளைப் பெருமளவில் தாக்கும் நோக்குடன் அமெரிக்கா செயல்படுகிறது என்பதற்கு இவை சான்றாகும். லெபனனில் அமெரிக்காவின் நடவடிக்கைகள், உலகெங்கணும் பயங்கரவாதம் மற்றும் குழிபறிப்புச் செயல்களை மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் ராணுவ ஆக்கிரமிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்''

### அணுவாயுத ஏவுகணைப் பரிகரணம்

# ஜெனிவாப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமானது!

ஜெனிவா, நவ. 30

அணுவாயுத ஏவுகணை பரிகரணம் தொடர்பாக அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் ஜெனிவாவில் மீண்டும் ஆரம்பமாகின.

அமெரிக்க ஏவுகணைகளை மேற்கு ஜெர்மனியில் நிறுவுவதை ஆட்சேபித்து இங்கு நடைபெற்றுவந்தபேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு கடந்த 23ம் திகதி சோவியத் யூனியன் வெளிநடப்புச் செய்தது.

நேற்று மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொண்ட சோவியத் பிரதிநிதிகள் குழுத் தலைவரிடம் இந்த பேச்சுக்கள் தொடருமா என்று கேட்டபோது பதில்கூற மறுத்துவிட்டார். (கு)

## 4-வது கிரிக்கெட் டெஸ்ட்

# வெற்றி தோல்வி இல்லை!

(பம்பாய்)

இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், மே, இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் பம்பாயில் நடைபெற்ற 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நேற்று வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

நேற்றைய மதியபோசன இடைவேளைக்கு சற்று முன்பே இந்தியக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 173 ஓட்டங்களை எடுத்தது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ஆட்டம் முடிவடையும் முடிவடையும் போது மே. இந்தியக் கோஷ்டி 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 104 ஓட்டங்களை பெற்றது.

[illegible] விபரம்: இந்தியக் கோஷ்டி: 463, 5-173. மே. இந்தியக் கோஷ்டி: 393, 104-4. (கு)

## அகதிகள் புனர்வாழ்வுக்கு அன்பளிப்பு

(திருகோணமலை)

விசுவமடு இளைஞர் திட்டத்தைச் சேர்ந்தஇளைஞர்கள் வன்செயலில் பாதிக்கப்பட்ட திருகோணமலை அகதிகளின் புனர்வாழ்வுக்கென்று7500 ரூபாஅன்பளிப்புச் செய்துள்ளனர்.

திருகோணமலை அகதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் கூடிய அக்கறை காட்டிச் செயல்ப்பட்டுவரும் திருகோணமலை ரேட்டறிக் கழகத்திற்கு இப்பணத்தை விசுவமடு இளைஞர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

## எதிரிக்கு கடுங்காவல்!

(திருகோணமலை)

அல்லை பலாத்கார வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட எதிரிக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு கே. பாலகிட்னர் மூன்று வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் இவ்வழக்கு கடந்த திங்கள் தொடக்கம் விசாரணை செய்யப்பட்டு வெள்ளி தீர்ப்பு வழங்கப்பட்டது.

சிங்களம் பேசும் ஜூரிகள் (இரண்டு பெண்களுட்பட) எதிரி குற்றவாளி என்று ஏகமனதாகத் தீர்ப்பு வழங்கவே மேற்கண்ட தண்டனையை மேல்நீதிமன்ற நீதிபதி வழங்கினார்.

அபராதம் செலுத்தத்தவறினால் மேலும் 10 மாதம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி மேலும் எதிரிக்கு உத்தரவிடப்பட்டது.

இவ்வழக்கில் பியவதி என்ற திருமணமான பெண்ணைபலாத்காரம் செய்ததாக பிரேமதாஸ என்ற இளைஞன் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கடந்த ஜூலை மாதக் கலவரங்களினால் இடம்பெயர்ந்து வந்துசேர்ந்துள்ள மாணவிகளின் நலன்கருதி 50 மேசைகளையும், 50 கதிரைகளையும் நோர்வே நாட்டின் நோர்வேஜின் நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அத்துடன் றெட்பானா நிறுவனம் இக் கல்லூரியில் புதிய மலசலகூடம் அமைப்பதற்கு 13 ஆயிரத்து 500 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

## மணிவாக்கு

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்

— குறள்

# நமது நோக்கு

## நிர்வாகத்தின் இருகண்கள்: நேர்மை திறமை

எதிர்பாராத ஒரு நெருக்கடி உருவாகும் போது நாட்டை மீட்க வல்லது நேர்மையான திறமையான நிர்வாகம்.

ஆட்சி எவ்வாறு தொழிற்படுகிறதென்ற பொதுஜன அபிப்பிராயம் இலகுவாகக் கணிக்கும் அரசியல் உத்திகள் எங்கள் நாட்டில் இல்லை. பொதுஜன அபிப்பிராய கணிப்பு என்று சொல்லப்படும் (Public Opinion Polls) மதிப்பீடு முறை புள்ளியியலில் ஒரு உயர்தரமான சாதனை. கிழக்கு நாடுகளுக்கு இம்முறை காலகதியில் வருமென நம்புகின்றோம்.

வாரத்துக்கு வாரம் அரசியல் நிலையை காய்ச்சல் கருவிபோல் மதிப்பிடும் முறை ஆட்சியின் பொதுவான ஏற்றமிறக்கத்தை கணிக்கமுடியும்; அந்தநிலை கைகூடாத கட்டத்தில் அரசின் நிர்வாகதிறமை அவசர காலத்திலேயே தென்படுவதை நாம் தெளிவாகக் காண்கின்றோம்.

கடந்த இனக்கலவரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் நடந்த கொடுமைகளுக்கு நிர்வாகத்தின் திறமையின்மையே காரணமென்று நாமறிந்து ஏமாந்தது மட்டுமல்ல. அதற்குப் பலியான பல உயிர்களுக்குக் கண்ணீர் வடித்தோமல்லவா?

இதனை மறைமுகமாக வானொலியில் குறிப்பிட்டவர் ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்த திஸடி அல்விஸ்.

இந்த எதிர்பாராத கொடுமை நாட்டின் நிர்வாகத்திறமை இன்மையைக் காட்டிக்கொடுத்தது போல் கலவரத்தால் நாட்டுக்கு உண்டான அத்தியாவசியமான புனரமைப்பு பணிகள் ஒருபெரும்திறமையான நியாயமான நிர்வாகத்தலைவர் தேவை என்ற சவாலை விட்டன. அதனை ஏற்கும் வல்லமை படைத்த சிவில் சேவிஸ் உயர்நிர்வாகி பிரட்மன் வீரக்கோன் என்று அரசு நினைத்து நியமித்தது. அது எவ்வகையிலும் வீண் போகவில்லை.

இன்று அத்தியாவசிய சேவைகள் நாயகமும் பிரதமரின் காரியதரிசியுமான திரு. பிரட்மன் வீரக்கோனுக்கு 116 நாடுகள் கொண்ட சர்வதேச அமைப்பு ஒன்றில் செயலாளர் நாயகம் என்ற பெரும் பதவி கிடைத்திருப்பதாகச் செய்தி சொல்கின்றது.

இன்றைய பொறுப்பான பதவியை விட்டு நாட்டை விட்டு இவர் போவதை யாரும் விரும்புவாரா? அவ்வளவு அக்கறையோடும் ஒழுக்க நெறியிலும் நின்று திறம்படப் பணிபுரியும் திரு. பிரட்மன் அத்தியாவசிய சேவைகள் சீரடையும் வரை தொடர்ந்து பணிபுரிய வேண்டுமென்று மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்; நாட்டை மீட்க வல்ல பணி இது.

தற்பொழுது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளைப் பூர்த்தி செய்த தன் பின்பே தான் புதிய பதவி ஏற்கப் போவதாக அவர் அறிவித்திருக்கிறார் என்ற கூற்று உண்மையானால் அது பெருமளவிற்கு வரவேற்கத்தக்கது

## ஐ. தே. க. - ஓ. மீ. ச.

நாம் இங்கு குறிப்பிடும் இணைப்பு வாசகர்களுக்கொரு நொடி போல்தோன்றும்; ஆனால் அதனை இலகுவாக அவிழ்க்கலாம் ஐ. தே. க என்ன என்பதைத் தெரியாதவர் எவருமில்லை. ஓ. மீ. ச. என்றால் ஒழுக்க மீளமைப்பு சங்கம்: இது ஒரு சர்வதேச இயக்கம்; ஆங்கிலத்தில் எம். ஆர். ஏ (MRA) என்று சொல்லப்படுவது: Moral Rearmament Association.

புதுடில்லியில் இருக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை அண்மையில் எம். ஆர். ஏயின் ஒரு பெருந்தலைவர் ராஜ்மோகன் காந்தி சந்தித்த செய்தி எங்கள் பத்திரிகையில் படித்த நினைவு உண்டு.

இவ்விரு தலைவர்களின் இரு ஸ்தாபனங்களும், முற்போக்குவாதிகளின் கண்டனத்துக்கு இலக்காவதை நாம் பெரிதுபடுத்த விரும்பவில்லை; இலங்கைக்கு மீட்சி ஐ. தே. க. வாலே என்று கூறுவதும் உலகுக்கு மீட்சி எம். ஆர். ஏ. யாலே என்று கூறுவதும் கேலி போல் தோன்றும்.

இரண்டும் அமெரிக்க நட்புடையவை என்பது இன்னொரு கண்டனம்; இரண்டில் எதனையும் சேர்ந்து முன்னுக்குவர முடியுமானால் உலகம் சுற்றும் வாய்ப்புக் கிட்டுமென்பதும் ஒரு பரிகாசப் பேச்சு.

இவை எவ்வாறாயினும் திரு. ராஜ்மோகன் காந்தி இருபெரியார்களின் பேரன், மகாத்மா காந்தியின் மகன் தேவதாசின் மகன்; ராஜாஜியின் மகள்- சில வாரங்களுக்கும் முன் காலஞ்சென்ற லக்ஷ்மியின் மகன்; இந்தியாவின் வடக்கு—தெற்கு, பிராமண-வைசிய, இந்தி-தமிழ் (Three-in-one) இணைப்புத் திருமணத்தின் பெறுபேறு.

இந்தியாவின் தலைமைக்கு, தமிழ் நாட்டின் தலைமைக்கு உரித்துடைய இப்பெருமகன், காந்தியைப் போலவோ, ராஜாஜியைப் போலவோ பணிபுரிய விரும்பவில்லை; ஆனால் உலக சேவைக்குத் தம்மை அர்ப்பணிக்க முன்வந்திருக்கும் ராஜ்மோகன் யாழ்ப்பாணம் வந்த போதெல்லாம் மானிடம் என்ற நிலையில் இலங்கை ஒற்றுமைப்பட்டு வாழ்வதை வற்புறுத்தியும், யாழ்ப்பாண மக்கள் அமைதி விரும்பும் மரபை பேண வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டவர்.

தந்தையும் தாயும், இளைஞனும் கன்னியுமாக 1927ல் காந்தியுடன் யாழ்ப்பாணம் வந்தபோது அரும்பிய காதலே இன்று ராஜ்மோகனாக காட்சியளிப்பது விடயம் தெரிந்தவர்களின் கருத்து.

எனவே ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் ராஜ்மோகன் பேசியரகசியம் தமமுடைய கொள்கைக்கோ தம்முடைய பெற்றோரின் பாசத்துக்குரிய யாழ்ப்பாண மண்ணுக்கோ மாறுபடுமென்று நம்ப இடமில்லை.

## நோர்வே பல்கலைக்கழகங்களில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு

நோர்வே நாட்டுப் பல்கலைக் கழகங்களில் சேரவிரும்பும் தமிழ் மாணவர்களுக்கு அங்குள்ள தமிழ் மாணவர் சங்கம் சில தகவல்களை அங்கு தந்துள்ளது:

நோர்வே நாட்டு கல்லூரிகளில் (Folkehgskole) மாணவர்கள் கல்விகற்றால் அது பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியுள்ளதாகும் என்ற கருத்தும் இலங்கையில் நிலவுவதாக அறிகின்றோம்.

இக்கல்லூரிகளில் அனுமதி பெறவிரும்பும் மாணவர்களுக்காக சில தகவல்களைக் கீழே தருகின்றோம் இவற்றைதங்கள் பத்திரிகையில் பிரசுரித்து அவர்களுக்கு உதவுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

# மக்கள் கருத்து

Folkehg schoolகளில் அனுமதிபெற்ற மாணவர்கள் விசாவிற்கு விண்ணப்பிக்கும்போது தமது பெயரில் கிட்டத்தட்ட 60 000 ரூபா நோர்வே நாட்டு வங்கி ஒன்றில் வைப்பில் இட வேண்டும்.

F. H. Schoolகளில் 10 மாதங்கள் கல்வி கற்பிக்கப்படும். கைவேலை மொழி, மற்றும் சமூகவியற் பாடங்கள் போன்றவையே கற்பிக்கப்படும். இக்கல்வி எது விதத்திலும் பல்கலைக் கழக அனுமதிக்கு உதவமாட்டாது.

F. H. Schoolகளில் கல்வி கற்றபின்னர்நோர்வேயிலுள்ள பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறவிரும்பும் மாணவர்கள் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல்வேண்டும்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களில் சாதாரணசித்தி பெற்றிருத்தல்வேண்டும் (S) ஒரு பல்கலைக் கழகத்தில் மாத்திரம் தான் சாதாரண சித்தி கணிக்கப்படுகின்றது ஏனைய பல்கலைக் கழகங்களில் விசேட சித்திகள் எதிர்பார்க்கப்படுகின்றது. (C)

க. பொ. த. சாதாரண பரீட்சையில் 5 திறமைச்சித்திகள் (C) உட்பட 6 பாடங்கள் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

TOEFL எனப்படும் ஆங்கில மொழிப் புலமைப்பரீட்சையில் சிறந்த புள்ளிகள் பெற்றிருத்தல்வேண்டும்.

நோர்வே மொழித் தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

இப்பல்கலைக்கழகங்களில் குறிப்பிட்ட அளவு வெளிநாட்டு மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றார்கள். அனுமதி கிடைக்காத மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதிபெற்று கல்விபயில்கின்றார்கள். இக்கல்லூரிகளில் தமது விருப்பத்துக்கேற்ற துறைகளில் அனுமதி பெறுவது இவ்வருடத்திலிருந்து கடினமாகியுள்ளது காரணம் பெருந்தொகையான நோர்வே நாட்டு மாணவர்கள் இத்துறைகளுக்கு விண்ணப்பிப்பதாகும்.

The Secretary, Tamil Students Association, P,O Box 33, University of Bergen 5001, Bergen Norway.

தமிழ் மாணவர் சங்கம்

## மின் இணைப்பு கொய்யாத் தோட்ட மக்கள் கஷ்டம்

யாழ். புதிய வீதி கொய்யாத் தோட்ட மக்கள் தங்கள் மின் இணைப்பு சம்பந்தமாக பல முறைப்பாடுகள் செய்தும் யாழ். மாநகர சபை எந்த நடவடிக்கையும் எடுக்காது ஒரு சிலரின் மின்இணைப்பை மாத்திரம் பாதுகாத்துவருகின்றது. இது அந்தப் பகுதி மக்களின் மனக்குமுறலை மேலும் அதிகரிப்பதுடன் ஆணையாளருக்குக் கொடுக்கப்பட்ட மகஜர் மீது நடவடிக்கை எடுப்பது என்று கூறி பின்போடப்பட்டுள்ளது. இதனால் 90க்கு மேற்பட்ட இளைஞர் சிறுவரின் படிப்பை பாதிக்கின்றது உடனடியாக யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்குமா?

கொய்யாத்தோட்டம்
புதிய வீதி
1ம் ஒழுங்கை வாழ் மக்கள்

## ம(றை)றக்கமுடியாத உண்மை

25 - 11 - 83 ல் வெளிவந்த "ஈழநாடு" பத்திரிகையில் திரு நா. சண்முகதாசன் தான் யாழ்ப்பாணத்தில்தங்கிஇருந்த பத்து நாட்கள்பற்றி தன் அனுபவத்தை எழுதி இருந்தார்.

அதில் அவர் இன்று யாழ்ப்பாணத்தில் கூட்டணி அரசியலோ, தலைவர்களோ இல்லை. கூட்டணித்தலைவர்களில் பலர் தென்னிந்தியாவுக்குக் குடும்ப சகிதம் சென்றுவிட்டனர். திரும்பி வரும் நோக்கமும் இல்லைப் போல என்றும் யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும்கூட்டணித் தலைவர்கள் வாயைத் திறக்க மறுக்கிறார்கள், தலைவர்கள் இல்லாத அனாதைகளாக தமிழ் மக்களைத் தவிக்கவிட்டிருக்கின்றனர்" என்றும் எழுதி இருக்கிறார் உண்மை நிலை என்ன?

அவருடைய கூற்றின்படி உல்லாச வாழ்வு வாழ்வதற்கா போனார்கள்? இல்லை தமிழ் மக்களுடைய பிரச்னையைத் தீர்க்க வேண்டும் இதற்கு இந்தியா உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் தான் அவர்கள் அங்கே போய் பாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இன்றைய நிலையில் இங்கு இருப்பதை விட அங்கு செல்வதே மேல். தமிழ் மக்களுக்கு இதனால் லாபமே தவிர நட்டம் இல்லை, மேலும் அரசாங்கத்தின் கண்களுக்குக் கூட்டணியினரும் தீவிரவாதிகளும் இன்று ஒன்றே.

இந்தியாவின் உதவியுடன் தமிழர் பிரச்னை தீரும் என்று கணிசமான தமிழ் மக்கள் எண்ணி இருக்கிறார்கள். என்றால் அதற்கு கூட்டணித்தலைவர்கள் அங்குபோவது அவசியமாகின்றது! இதில் என்ன தப்பு இருக்க முடியும்? ஓரிரு நாட்களில் தீருகிற பிரச்னையா இது? தீவிரவாதிகளின் தலைவர்கள் இந்தியாவில் இருப்பதைபுரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறதாம் கட்டுரையாளருக்கு ஆனால் கூட்டணித் தலைவர்கள் மாத்திரம் அங்கு இருப்பது நியாயமில்லையாம!

அடுத்து, இங்கு இருக்கும் தலைவர்கள் வாயைத் திறக்க மறுக்கிறார்களாம் கூட்டணியினர் பாராள மன்றத்திலிருந்த பொழுது அரசுடன் வாதாடி சொல்ல வேண்டியதைஎல்லாம் சொன்னார்கள் ஆனால் அரசு கேட்டதா? இல்லை மேலும், அன்றைய சூழ்நிலை வேறு இன்றைய சூழ்நிலை வேறு அப்படி இருக்க இன்று அவர்கள்என்ன செய்யமுடியும்?

இன்றைய இக்கட்டான நிலையில் அவர்கள் மௌனமாக இருப்பதில் என்ன தப்பு?

இன்று யாழ்நகரில் சிவில் நிர்வாகம் இல்லையென்று கவலைப்படுகிறார். அங்கலாய்க்கிறார். உண்மை. சிலமாதங்களுக்கு முன்னர் இவற்றிற்கான தேர்தல்கள் நடைபெற்ற பொழுது கூட்டணியினர் இவற்றின் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் எங்கள் நிர்வாகத்தை நாங்கள் நடத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் பல அச்சுறுத்தலுக்கும், பயமுறுத்தல்களுக்கும மத்தியில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். கணிசமான மக்கள் ஒன்றுக்கும் அஞ்சாமல் துணிந்து இவர்களுக்கு வாக்களிததனர் இவற்றையெல்லாம் எதிர்த்தவர்கள் யார்? பகிஷ்கரிக்க வேண்டுமென்று சொன்னவர்கள் யார்? பின்னர் ஏன் அங்கலாய்க்க வேண்டும் அதன் பின்னர் ஏற்பட்ட திடீர் அரசியல் மாற்றங்கள்காரணமாக கூட்டணியினர் ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டனர். இதில் யார் யாரைக் குறைகூற முடியும்?

இப்படியான சூழ் நிலையில் அரசியல் சிந்தனைகளும், நடவடிக்கைகளும் தீவிரவாதஇளைஞர்களின் கையில்தான் இருக்கிறது என்று அரசியல் கயிறு விடுகிறார் போலும் கட்டுரையாளர்.

இன்று தலைவர்கள் எல்லாம் ஒன்றுபட்டுவிட்டார்கள். இந்தியாவின் தலைவி இந்திரா, தமிழர் பிரச்னைபற்றி பல முறை இவர்களை சந்திக்கிறார். திரு பார்த்தசாரதி சந்திக்கிறார். தலைவர்களை எம். ஜி, ஆர்,, கருணாநிதி இன்னும் பலர் இவர்களைச் சந்திக்கிறார்கள். பத்திரிகைகள் எல்லாம் இவர்களுடைய பேட்டியை பக்கம், பக்கமாக வெளியிடுகின்றன. உலகில் வாழும் தமிழ் மக்கள் எல்லாம் இனி அடுத்ததுஎன்ன என்று அக்கறையோடு இவர்களுடைய நடவடிக்கைகளை கவனித்து வருகிறார்கள். இவை எல்லாம் எப்படி வந்தது? ஒற்றுமை ஒன்றினால்தான்வந்தது. தலைவர்கள் ஒன்று சேர்ந்தார்கள், மக்களும் ஒற்றுமைப் பட்டார்கள். ஒரு கொள்கைப் பிடிப்பில் ஓர் இயக்கத்தின்கீழ் செயல்பட்டார்கள். இது ஒரு சுலபமான செயல் அல்ல. ஆனால் நடந்துவிட்டது. இது பெருமைப்படக் கூடிய விஷயம் அல்லவா? இது இவருக்குப் பிடிக்கவில்லையா?

இராணுவத்தின் அடக்கு முறைதான் இவர்களைத் தீவிரவாதிகளாக மாற்றி இருக்கிறது. மறுக்கவில்லை. ஆனால் இராணுவத்தை — படைகளை சீண்டும பொழுது அவர்களும் எப்படி மாறுவார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் இதன் விளைவென்ன யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, எரிந்தன. பலர் கொலைசெய்யப்பட்டார்கள். ஜூலை 24ம் திகதி தொடங்கிய இனக்கலவரமும் இதன் எதிரொலியே! இப்படியான சந்தர்ப்பங்களில் இத்தலைவர்கள் என்ன செய்தார்கள் இவர்கள். இவர்களிடம் திட்டம் எதுவும் இல்லையா? திருகோணமலையில் முதலில் தாக்குதல் நடைபெற்ற பொழுது தலைவர் அமிர் சொன்னார் "இது நாடு முழுவதும் பரவலாம ஆகவே நாங்கள் கவனமாக செயற்பட வேண்டும் என்று சொன்னார். அதன் பின்னர்

(5ம் பக்கம் பார்க்க)

## மின்விளக்கு எரியுமா?

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியில் பொதுமக்களின் செலவில் அமைக்கப்பட்ட மின் விளக்கு கடந்த இரண்டு மாதகாலமாக எரிய மறுக்கிறது. பொதுமக்களுக்கு அசௌகரியத்தைத் தருகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா?

பொதுமக்கள்

# “யாழ்ப்பாணம் வந்து போகும் இலங்கைப் பத்திரிகையாளர்கள் எழுதுவது குருடர் யானை பார்த்த கதைதான்”

**ப**னையோலைகளால் வேலியிடப்பட்ட வீடுகள் தொலைவில் தெரிகின்றன. அப்பிரதேசம் முழுவதிலும் நிலவும் அமைதியைத் தகர்த்துக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி எமது புகையிரதம் செல்லுகின்றது. கடுமையான வெய்யிலையும் பொருட்படுத்தாது வயல்வெளிகளில் வேலை செய்வோர் புகையிரதத்தைப் பூராயத்துடன் பாக்கின்றனர். அவர்கள் இன்னுமொரு கொழுத்த அறுவடையை எதிர்நோக்கி தமது மண்வெட்டிகளால் வரண்ட நிலத்தைக் கொத்திச்சாறுகின்றனர். புகையிரதப்பாதை அருகே செல்லுகின்ற பாதையில்வழமைபோல் வாகனங்கள் ஓடுகின்றன.

பனையோலை வேலிக்குள் சிறைப்பட்ட இளங்குமரிகள்

> யாழ்ப்பாணம் வந்து சென்ற ‘ஸ்ரீலங்கா தீப’ பத்திரிகையின் உதவி ஆசிரியர் திரு. பாலலித லக்ஷ்மன் டி சில்வா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது. மொழிபெயர்ப்பு.
>
> ‘பெரி’

வேலிக்கு மேலால் புகையிரதத்தை எட்டி எட்டிப்பார்க்கின்றனர். வழமைபோலவே ‘பனைமரக் கூட்டங்கள் தமது ‘இனசன’த்துடன் ஓடுகின்ற புகையிரதத்துக்கு விடைகொடுத்து அனுப்புகின்றன.

புகையிரதத்தில் உள்ள சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் யாவருமே தத்தமது கற்பனைகளுடன் ஜாதிபேதமின்றி ஒரே வேகத்தில் ஒரே திசையை நோக்கிப் பயணஞ் செய்கின்றனர்; ஒருவரோடொருவர் உரையாடுகின்றனர். ஒரு சிலர் மீண்டும் தொழில் செய்யும் பொருட்டு யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லுகின்றனர். வீடுவாசல்களை இழந்த நிலையில் தமது உறவினர்களின் தயவை நாடிச் செல்வோரும் அதில் இருக்கவேசெய்தனர். பல்கலைக் கழகத்தின் புதிய தவணை தொடங்கவிருப்பதால், யாழ்ப்பாணத்தில் ஜாகை தேடிச் செல்லும் இளம் தமிழ்ப்பெண்களும் இருந்தனர். புகையிரதத்தில் அங்குமிங்குமாக காவல் புரியும் கடற்படை வீரர்களும், தரைப்படைவீரர்களும் புகையிரத பாதுகாப்பு அதிகாரிகளும் பயணிகளுக்கு நண்பர்களாகி ஒருவருடனொருவர்நேச பாவத்துடன் உரையாடுகின்றனர்.

புகையிரதம் ஆனையிறவுப் புகையிரத நிலையத்தை அடைகிறது. எல்லோரும் உஷாராகிறார்கள் புகையிரதத்தின் இருபுற வாயில்களிலும் எந்திரத்துப்பாக்கிகள் சகிதம் வீரர்களின் காவல் ஜரூராகின்றது. புகையிரத நிலையத்திலும் இருந்தபடைவீரர்கள் விரைவாக ஆயுதங்கள் சகிதம் புகையிரதத்தை அண்மிக்கிறார்கள் எந்தவொரு நெருக்கடிக்கும் முகம் கொடுக்க அவர்கள் தயார்நிலையில் நிற்கிறார்கள் பயணிகள் இறங்கிப் பேகிறார்கள். புகையிரதத்தினுள் நிற்கும் படைஅதிகாரிகள்புகையிரதப் வந்து சேர்ந்த விதம் பற்றி ‘வோக்கிடோக்கி’ மூலம் இராணுவத் தலைமையகத்துக்கு அறிவிக்கிறார்கள். சிங்களவர்கள் சிங்களத்திலும் தமிழர்கள் தமிழிலும் வழக்கப்போல் சுயேச்சையாக உரையாடுகிறார்கள் இவ்வேளையில், கொழும்பில் நான் கேள்விப்பட்ட கதைகள் சில அடிக்கடி நினைவுக்கு வருகின்றன ஒரு படைவீரனின் துவக்கு என்னை நோக்கிஎந்தக்கணத்தில் நீளும் என்ற திகிலுடன் நான் நிற்கின்றேன். ஆனால் அதற்குப் பதிலாக அவர்களின் நேசப் புன்னகைதான் என்னை நோக்கியது. ஆனையிறவுவரை இது வரை எம்முடன் பயணித்து வந்த படைவீரர்கள் எம்மிடம் விடைபெற்றுச்செல்கின்றனர்.

அவர்களை வரவேற்றுஅழைத்துச் செல்லவோ தானோ என்னவோ ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள் பல வந்து நிற்கின்றன. இராணுவ முகாமையும் அதையடுத்த பல மைல்களையும் கடந்து புகையிரதம் யாழ்ப்பாணம் நோக்கி மீண்டும் புறப்படுகிறது.

கொழும்பில் ‘வியத்நாம்’ என்று பலரால் வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணத்தை நாம் வந்தடைந்தோம். நொருக்கப்பட்ட கட்டடங்கள், வெறிச்சோடிப்போன கடைவீதிகள் ஆகியவற்றை எதிர்பார்த்துப் போன நாம். வழமையான சந்தடியுடனும் சகஜபாவத்துடனும் நிகழ்ந்த நகரினுள் பிரவேசித்தோம்.

யாழ் புகையிரத நிலையத்துக்கு முன்னால் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான பேக்கறியொன்று இருந்தது. ‘சந்திரா பேக்கறி’ என்ற பெயருள்ள இந்த பேக்கறியின் உரிமையாளர் எஸ். எஸ். அபேயசேகராவுடன் நாம் சிங்களத்திலேயே பேசினோம். அக்கடைக்கு வரும் பிள்ளைகளோ அன்றி கடையோரமாக வீதியில் செல்வோரோ எம்மை விநோதமாகப் பார்க்கவில்லை. திரு. அபயசேகரா எமக்குக் கூறிய வரையில், இன்று யாழ்ப்பாணத்தில் வர்த்தக, வியாபார நடவடிக்கைகள் வெகுதூரம் தடங்களுக்குள்ளாகியுள்ளன. இனக்கலவரங்களுக்கு முன்னர் நான்கு மூட்டை மாவில் பாண் சுட்ட இந்த பேக்கறி, இன்னுமொரு சிங்கள பேக்கறியிடமிருந்து விற்பனைக்காகப் பாணை வாங்கும் நிலையிலுள்ளது. யாழ்ப்பாணம் இன்னும் வழமையான நிலைமைக்குத் திரும்பவில்லை’ என்றுதான் திரு அபயசேசரா கூறினார்

சந்திரா பேக்கறியிலிருந்து 50 யார் தொலைவில் சிங்கள மஹா வித்தியாலயம் இருந்தது ஏறத்தாழ 400 மாணவர்கள் உள்ள இந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலுவோரில் 90 சதவீதமானோர் தமிழர்களே. இவ்வித்தியாலயத்தில் உடற்பயிற்சி போதனாசிரியராகக் கடமையாற்றும் திரு. சேனரத்னவை சந்திரா பேக்கறிக்கு அண்மையில் சந்திக்கும் வாய்ப்புக்கிட்டியது.

## சிங்கள வார ஏட்டில் வெளியான கட்டுரை இது

**“எமது பொதுஜன தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாகச் செய்யப்படும் பொய்ப்பிரசாரம்காரணமாக பலர் யாழ்ப்பாணத்தை ஒரு யுத்த பூமியென எண்ணிக் கொண்டிருந்தாலும் வாஸ்தவத்தில் அது உண்மையல்ல. யாழ்ப்பாணம் வந்து போகும் இலங்கைப் பத்திரிகையாளர்கள் எழுதுவது கூட குருடர் யானையைப் பார்த்த கதைதான். இதை எவரிடம் சொல்லுவது? இந்தரீதியில் இப்பிரச்னைக்கு எப்போதுமே தீர்வுகாண முடியாது’’** —இப்படிக் கூறினார் திரு. சேனரத்ன.

தமக்கோ அன்றித் தமது பாடசாலைக்கோ தமிழ் மக்களினால் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித கரைச்சலும் ஏற்படவில்லை எனக் கூறிய அவர், யாழ்ப்பாண மக்கள் தமது சகோதரர்போல் உதவிசெய்து வருகின்றனர் என்பதைப் பெருமையுடன் கூறினார்.

யாழ்ப்பாண வாசிகள் தமது அவசிய தேவைகளின்பொருட்டுச் சைக்கிளில் நகர் முழுக்க வலம் வருகின்றனர். மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து வீடு நோக்கிச் சாரி சாரியாகச் செல்கின்றனர். வேறு சிலர் விளையாட்டுத் திடலோரம் தரித்துநிற்கின்றனர். எவர் கண்ணுக்கும் நாம் அந்நியர்களாகப்படவில்லை. நாம் யாழ் நகரின் மத்திய பகுதிக்குச் செல்லும்போதுகூட அச்சபயமின்றி சிங்களத்தில் தான் பேசிக்கொண்டு சென்றோம். முதல் நாளன்று நாம் தங்குவதற்கென யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள ஒரு விடுதிக்குச் சென்றோம். எங்களுக்கு ஒரு அறையினை ஒதுக்கித் தருவதில் அவர்கள் சிறிதுகூடத் தயக்கம் காட்டவில்லை.

நாம் அந்த விடுதியில் தங்கியிருந்த வேளை, இருந்தாற்போல் விடுதிக்கு சில யார் தூரத்தில் பெரிய சத்தமொன்று கேட்டது. எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற மனநிலையிலிருந்த எமக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. நாம் சத்தம் வந்த திசையை நோக்கினோம். ஆனால் அச்சத்தத்தைக் கேட்டு நகரவாசிகள் பயந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் வெகு சர்வசாதாரணமாக சத்தம் வந்த இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். நானும் அத்திசைநோக்கி மெதுவாகப் போனேன். வெற்றுப் பீப்பாய் ஒன்று லொறியிலிருந்து இறக்கப்படும் போது ஏற்பட்ட சத்தமே அது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. ஒரு குண்டு வெடித்தாலும் கூட யாழ் நகர மக்கள் இப்படி சர்வ சாதாரணமாகத்தான் நடந்து கொள்ளுவார்களோ என நான் எண்ணினேன்.

மாலையில் ஒரு தமிழ் நண்பருடன் நகரின் பல இடங்களுக்கு நாம் உலவச் சென்றோம். சாரம் அணிந்துகொண்டு சிங்கள மொழியில் சம்பாஷித்துக் கொண்டு நகரம் முழுவதையும் நாம் அச்ச பயமின்றி வலம்வந்தோம். எங்களுக்கு எதுவிதத்திலும் எவராலும் கரைச்சல் ஏற்படவில்லை. எம்மைப் பொறுத்தளவில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திக்குமிடையில் எதுவித வித்தியாசமும் தெரியவில்லை.

பயங்கரவாதிகள் கொழும்பிலும் இருக்கிறார்கள், கண்டியிலும் இருக்கிறார்கள், அதேபோல யாழ்ப்பாணத்திலும் இருக்கிறார்கள். வடக்கிலுள்ள பயங்கரவாதிகளின் செயல்களால் தமக்கு என்ன நேருமோ என்ற சந்தேகமே கொழும்பில் வாழுகின்ற யாழ்ப்பாணத்தவர் எந்நேரமும் பயத்துடனும் பீதியுடன் இருப்பதற்கான காரணமாகும்.

நாம் யாழ்ப்பாண விளையாட்டுக் கழகத்திற்குச் சென்றோம். அங்கிருந்த தமிழ் இளைஞர்கள் சொற்ப நேரத்தில் எம்முடன் நண்பர்களாகி விட்டனர். அவர்களுடன் சேர்ந்து விளையாடும் அளவிக்கு எமக்கு அன்று யாழ்ப்பாணத்தில் மனநிம்மதியான சூழல் இருந்தது எனச்சொல்லுவதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நாம் யாழ்ப்பாணம் புறப்படவிருந்த தருணம், எமது பயணத்தைத் தள்ளிப்போடும்படி பலர் எம்மை எச்சரித்தவர். இதற்குக் காரணம் யாழ்ப்பாணம்பற்றி அவர்கள் அறிந்திருந்ததெல்லாம் அவ்வளவுதான்.

சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் எவ்வித அச்சபயமின்றி வாழ முடியும். அங்கு அவர்களுக்கு எதுவுமே நேரவில்லை. அதேபோல பௌத்த பிக்குகளும் அங்கு அமைதியாக தமது மதக் கடமைகளைச் செய்யமுடியும்.

நாக விகாரைக்கும், நாகதீவுக்கும் எதுவித கரைச்சலோ இடைஞ்சலோ ஏற்படவில்லை அங்குள்ள மக்கள் பௌத்தத்தையும் தமது இந்து மதத்தைப்போலவேநேசிக்கிறார்கள்.

## ம(றை)றக்க முடியா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்ததுதான் நம் எல்லோருக்கும் தெரியுமே கடந்த வாரம் கூட புதுடில்லியில் அமிர்அளித்த பத்திரிகைப் பேட்டியில் அரசாங்கம் தங்களுடன் ஒரு சமரச தீர்வுக்கு வந்தால் தீவிரவாதிகளை தங்கள் பக்கம் திருப்பலாம் என்று சொன்னார். பௌத்த தர்மத்தை பின்பற்றுவதாகச் சொல்லும் இந்த அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பந்தை பயன் பயன்படுத்த வேண்டும்.

மேலும் கட்டுரையாளர் தீவிரவாதிகள் எல்லோரும் கிட்டத்தட்ட இடதுசாரி எண்ணங்களைப் பிரதிபலிக்கிறார்கள் என்கிறார்; பிற்போக்கு என்று கருதப்பட்ட யாழ்ப்பாணத்திற்கு இது வரவேற்கத்தக்க அறிகுறி என்கிறார் இவர். யாழ்ப்பாணம் என்று சொல்கிறபொழுது அது வடபகுதி மக்களைத்தான் கூறுகிறது. அப்படியானால் வடபகுதி மக்கள் எல்லோரும் தீவிரவாதிகள் இடதுசாரிகள் என்று இவர் சொல்லுகிறார்? ஏன் வேறு ‘சாரிகள்’ வடபகுதியில் இல்லையா? இடதுசாரி என்றால் முற்போக்கு மற்ற சாரிகள் எல்லாம் பிற்போக்கா? தீவிரவாதிகள் இடதுசாரிகளாக இருக்கலாம் அதற்காக யாழ்ப்பாணம் எப்படி இடதுசாரியாகமுடியும்? மக்கள் பேசாமல் மௌனமாக எல்லாவற்றையும் கவனித்து வருகிறபடியால் அவர்கள் இடதுசாரிகள் என்று நினைக்கிறார் போலும்!

கடைசியாக அவர் யாழ்ப்பாணத்தில் முக்கிய கல்லூரி அதிபர் தன்னுடைய வைத்திய நண்பருக்கு தீவிரவாத இயக்கங்களில் இன்று ஈடுபடுபவர்கள் எல்லாம் என்னுடைய திறமையான மாணவர்களே’’ எனக்கூறினாராம். அப்படியானால் மற்றவர்கள் எல்லாம் திறமையான மாணவர்கள் இல்லையா? இப்படிக் கூறுவதால் யாருக்குப்பெருமை (சிறுமை) தேடப்பார்க்கிறார்? இந்தக் கருத்தின் உள்நோக்கம என்ன? தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடும் விளையாட்டுப போலிருக்கிறது. ஆனால் இது நடக்காது. இவ்வித கருத்துடையவர்களை பத்து வருஷம்தான் யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் இப்படித்தான் எழுதுவார்கள் இதனை மக்கள் நன்கறிவார்கள்.

—வி. ஆர். லிங்கன்
யாழ்ப்பாணம்.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி: அரசியலமைப்பில் திருத்தம்

(கொழும்பு)

அரசாங்கக் கட்சிக்கு அடுத்ததாகக் கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சியிலிருந்தே எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவுசெய்யும்வகையில் அரசியலமைப்புக்குத் திருத்தம் கொண்டுவரவிருப்பதாக அறியப்படுகிறது.

இத்திருத்தம் தொடர்பாக தற்போது ஆலோசனை செய்யப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

இத்திருத்தத்தைத் தயாரிக்கும்படி அரசாங்கம் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு ஏற்கனவே ஆலோசனை தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

1977-ம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 3,179,221 வாக்குகளைப் பெற்றது. தமிழர் விடுதலைக்கூட்டணி 4,21,488 வாக்குகளைப் பெற்றது. ஆனால் கூடிய தொகுதிகளைக் கைப்பற்றிய கட்சியான கூட்டணியே எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக்கொண்டது.

அரசாங்கக் கட்சிக்கு அடுத்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 77-ம் ஆண்டுத் தேர்தலில் 1,855,331 வாக்குகளைப் பெற்றது. ஆனால் பாராளுமன்றத்தில் குறைவான தொகுதிகளைப் பெற்றிருந்ததால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறமுடியவில்லை. (க)

# "மனச்சாட்சியைத் தட்டிக்கேட்டு பழையபாடசாலைக்குத் திரும்புங்கள்!"

## இ. த. ஆ. ச. பொதுச்செயலாளர் மகாசிவம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இரத்தினபுரியில் ஒரு ஆசிரியர் தாக்கப்பட்டார். போகவந்தலாவையில் 3ஆசிரியர் 2மாதம் தடுத்து வைக்கப்பட்டனர். இரத்தினபுரியில் மற்ருெரு ஆசிரியர் பயமுறுத்தப்பட்டு தோட்டத்தில் அடைக்கலம் புகுந்தார். இப்படியான ஆசிரியர்கள் இருந்தால். அவர்களின் பெயர் பட்டியல் ஒன்றை அமைச்சருக்கு அனுப்புவோம் அவர்கள் பழையபாடசாலைக்கு செல்லத்தேவையில்லை''

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்கூட்டத்தில் பேசிய தமிழர்ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் மேற்கண்டவாறு கூறினர்.

சங்க உபதலைவர் திரு. எஸ். அரியதுரை தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. மகாசிவம் மேலும் கூறியதாவது:

''அக்டோபர் 13ம் தேதி வேலைக்குத் திரும்பவேண்டும் என்பது அரசின் கட்டளை. அக்டோபர் 13 முதல் வேலைக்கு செல்லாதவர்களுக்கு, சொந்த லீவா, அல்லது விசேட லீவா என்று பின்னர் தீர்மானிக்கப்படும்.

இந்த வாரம் மீண்டும் வேலைக்கு திரும்பும் ஆண் ஆசிரியர்களுக்கு இங்கு 750 முற்பணம் வழங்கப்படும். இந்த முற்பணம் பெற்றபின் ஆசிரியர்கள் அடுத்த சனி, ஞாயிறு தமதுபழையபாடசாலைகளுக்கு திரும்பவேண்டும்.

(கூட்டத்தில் பலத்த இரைச்சலும், சத்தமும் ஏற்படுகிறது)

''கூட்டத்தைகுழப்பி யாரும் திசைதிருப்ப முயன்ருல், நீங்கள் மட்டுமல்ல உங்கள் சங்கமும், தமிழ் சமுதாயமும், பாதிக்கப்படும். எவரும் முணுமுணுத்துக்கொண்டிருக்க வேண்டாம. விரும்பினுல் தலைவர் அனுமதிபெற்று இங்கு வந்து பேசலாம், எழுத்துமூலமான கேள்விகளுக்கு பதில் தரப்படும். கதைத்துக் கொண்டு காலத்தை வீணுக்காதீர்கள்.

### உடன் திரும்ப வேண்டியதில்லை

பெண் ஆசிரியைகள் உடனடியாக வேலைக்கு திரும்ப வேண்டியதில்லை. அவர்கள் பற்றி பின்னர் முடிவுசெய்யப்படும் அவர்கள் அக்டோபர் நவம்பர் சம்பளம் பற்றியும், பின்னர் தான் தீர்மானிக்கப்படும்.

''யாழ்ப்பாணத்திலுள்ள 2000 வெற்றிடங்களை பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மூலம் நிரப்பவிரும்பவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார். இங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப் போவதாக அமைச்சர் தெரிவித்தார்.

### வடக்குக் கிழக்கில் இடமாற்றம்

''பெண் ஆசிரியர்கள் நிச்சயம், வடக்கு, கிழக்கில் இடமாற்றம் பெறலாம் என்று அமைச்சர் உறுதியளித்திருக்கிருர். நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

''500 ஆண் ஆசிரியர்களும் பழைய பாடசாலைகளுக்கு செல்லுங்கள் ஆகக்கூடியது 2 கிழமைதான். இதனைச் செய்தால், மற்றும் கோரிக்கைகளுக்கு வெற்றிவாய்ப்பு இருக்கிறது.

''பாதுகாப்பு இருக்கிறது என்ருல், அக்டோபர் நவமபர் சம்பளத்தைப் பெற்றுவிட்டு வகுப்பேற்ற பரீட்சையை நடாத்திவிட்டு, மாணவர்களை சுயமாக வகுப்பேற்றிவிட்டு வந்துவிடுங்கள்,

சில ஆசிரியர்கள் பழைய இடங்களுக்கு செல்வதால் ஆபத்து உண்டு. அப்படியானவர்கள் என்னைச் சந்தியுங்கள். அவர்களுக்கு பெண் ஆசிரியர்களுக்குள்ள சலுகைகள்உண்டு.

### 3000 மாணவர் பாதிப்பு

நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும், மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர் கல்வி பெருமலும் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். 5ம் வகுப்பு மாணவரை, 6ம் வகுப்புக்கு ஏற்றுவதா? அல்லது 5ம் வகுப்பிலேயே வைத்திருப்பதா? என்றும் அமைச்சர் கேட்டார். தொண்டர் ஆசிரியர் பட்டியல் திரட்டிவிட்டேன் என்ருர் ஆசிரியர்கள் திரும்பாவிட்டால் என்ன நடக்கும் என்பதை சிந்தியுங்கள். இங்குள்ள எல்லாருக்கும் வைத்திய சோதனை வைக்கமுடியாது. அதற்கு பத்துவருடம் பிடிக்கும் உங்கள் மனச்சாட்சியைத் தட்டிக் கேளுங்கள் நீங்கள் வேலைநீக்கம்செய்யப்பட்டால் நிலைமை என்ன ஆகும்? கல்வி சேவை ஆணைக்குழுவைப்பற்றி உங்களுக்கு தெரியும்தானே. நீதியான அடிப்படையில் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கூட மீண்டும் வேலைபெற 4வருடம் பிடிக்கும் அந்தநிலைக்கு ஆளாகப் போகிறீர்களா?

### எமது மூன்று கோரிக்கை

நாங்கள் 3 கோரிக்கைகளை சமர்ப்பித்தோம் உடனடியாக அக்டோபர் மாதச்சம்பளம் இடம்பெயர்ந்த மாவட்டத்தில் வழங்கவேண்டும் என்பது முதல் கோரிக்கை. அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து நேரில் ஆராயவேண்டுமென்பது இரண்டாவது கோரிக்கை. ஜனவரிவரை விசேட லீவு வழங்குவதுடன் டிசம்பர், ஜனவரி சம்பளம் இடம்பெயர்ந்துள்ள மாவட்டத்தில் வழங்கவேண்டுமென்பது மூன்ருவது கோரிக்கையாகும்.

நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாகவும், பாடசாலை மாணவர்களுக்குத்தான் பொறுப்பென்றும், வருட இறுதிப் பரீட்சையை நடத்தாமல் விடமுடியாதென்றும் அமைச்சர் கூறினுர்.

ஆசிரியரின் போக்குவரத்துச் செலவுபற்றி ஆராயப்பட்டது நாங்கள் 1000 ரூபாவிற்கு வற்புறுத்தினேம். அமைச்சர் 750 ரூபா கொடுக்கச் சம்மதித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது உங்களுக்கு அங்கு பிரச்னை ஏற்பட்டால் குழுவில் தெரிவிக்கலாம்.

### இரண்டில் ஒன்று...

5 வருடத்திற்குட்பட்டு கடமையாற்றியவர்களை அல்லது ஆண் ஆசிரியர்களை அனுப்புங்கள் என்று அமைச்சர் கேட்டார். ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது இல்லாவிட்டால் பேச்சுவார்த்தை பயனற்றுப்போயிருக்கும் பேச்சுவார்த்தை தொடருவதாக இருந்தால் ஏதாவது ஒன்றை நாம் ஏற்கவேண்டும்.

5 வருடத்திற்குட்பட்டவர் 700 பேர் இருந்தனர். ஆண் ஆசிரியர் 500 பேர் இருந்தனர். குறைந்த தொகையினரை அனுப்ப முடிவுசெய்தோம் ஆண் ஆசிரியரை அனுப்புகிருேம் என்று அமைச்சருக்குக் கூறினேம்.

ஆண் ஆசிரியர்கள் கோயிலிலாவது தங்கி, குளத்தில் குளித்து அங்கு உடை மாற்றிக்கொள்ளலாம். ஆனுல் பெண் ஆசிரியர்கள் எதுவும் செய்யமுடியாது. அதனுல் தான் இந்த முடிவை எடுத்தோம்.

ஆண் ஆசிரியர்கள் திரும்பிச்செல்லவேண்டும் என்பது தான் எமது நிலை.

இக்கட்டத்தில் மண்டபத்தில் பலத்த சத்தமும் இரைச்சலுமாக இருந்தது கேள்விகள் எழுதிக்கொடுக்கப்பட்டது. அக்கேள்விகளுக்குப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் பதிலளித்தார்.

கேள்வி: பண்டாரவளைக்குப் போனகிழமை சென்ற ஆசிரியர் நிலைமை சீராகவில்லை என்று திரும்பிவிட்டார். பண்டாரவளைக்கு மீண்டும் செல்லமுடியுமா?

பதில்: அதேமாதிரி நீங்களும் போய்விட்டு வாருங்கள்.

கேள்வி: பழைய இடங்களுக்குச் செல்பவர்கள் நிரந்தரமாக அங்கு விடப்படுவார்களா? அவர்களுக்கு இடமாற்றம் கிடைக்குமா?

பதில்: இது தற்காலிக ஏற்பாடு இடமாற்றத்தை எவ்விதத்திலும் பாதிக்காது.

கேள்வி: உடலுக்கும், உடைமைக்கும் ஆயுதப்படையால் சேதம் ஏற்பட்டால், சங்கம் நிவாரணம் அளிக்குமா?

பதில்: உடலுக்கு எவருக்கும் உடனடியாக பாதிப்பு ஏற்படுமென நான் எதிர்பார்க்கவில்லை. உடலுக்கும் உடைமைக்கும் சேதம் ஏற்பட்டால் ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டால் 84-ல் நிச்சயம் அவருக்கு இடமாற்றம் கிடைக்கும்.

கேள்வி: 45 வயதானவர்களும், 20 வருடம் சேவையாற்றியவர்களும், ஓய்வூதியம் பெறும் அமைச்சரவையின் திட்டம் என்னுச்சு?

பதில்: அதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொது நிர்வாக அமைச்சர் இன்னும் சுற்று நிருபம் தயாரிக்கவில்லை.

கேள்வி: பெண் ஆசியர்களையும், பழைய இடங்களுக்குப் போகும்படி அமைச்சர் இனிமேல் கூறினுல் என்ன செய்வது?

பதில்: அனைத்துப் பெண் ஆசிரியர்களையும் பழைய இடங்களுக்குப் போகும்படி கூறினுல் நிச்சயம் சங்கம் ஏற்றுக்கொள்ளாது.

கேள்வி: பெண் ஆசிரியர்களுக்கு அக்டோபர், நவம்பர் சம்பளம் கிடைக்காதா?

பதில்: அடுத்த பேச்சுவார்த்தையில் அதுபற்றித் தீர்மானிக்கப்படும்.

கேள்வி: பதுளையில் நாங்கள் தங்கியிருந்த வீட்டை சொந்தக்காரர் வேறு குடும்பத்திற்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டார். சங்கம் அந்த வீட்டைப்பெற்றுத் தருமா?

பதில்: சொந்தக்காரர் இருந்தால் எதுவும்செய்யமுடியாது வேறு குடும்பத்திற்கு வாடகைக்குக் கொடுத்திருந்தால் அந்தக் குடும்பத்தை வெளியேற்றி உங்களுக்குத் தரச் சங்கம் நடவடிக்கை எடுக்கும் அக்குடும்பத்தை வெளியேற்றிவிட்டு நீங்கள் அங்கு இருப்பது சாத்தியமா? என்பதைச் சிந்திக்கவேண்டும்.

கேள்வி: அரச ஊழியரான என் கணவர் பழைய இடத்திற்குத் திரும்பிவிட்டார். உணவு வசதிக்காக ஆசிரியையான நானும் அவரின் இடத்திற்கு டிசம்பரில் போகலாமா? 750 முற்பணம் கிடைக்குமா?

பதில்: இப்பவும் போகலாம், டிசம்பரிலும் போகலாம். 750 ரூபா பெண் ஆசிரியருக்கும் கிடைக்கும். அத்துடன் அக்டோபர், நவம்பர் சம்பளமும் கிடைக்கும்.

மற்றும் பல கேள்விகளுக்கும், பொதுச்செயலாளர் பதிலளித்தார். பின்னர் நேரிலும் பலர் அவரை சந்தித்து தங்கள் பிரச்னைபற்றி ஆராய்ந்தார்கள். (க)

---

## கோப்பாயில் நடந்த கருத்தரங்கு

(மானிப்பாய்)

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் க.பொ.த (சாதாரண) வகுப்பு மாணவர்களுக்கான ''வினுக்களுக்கு விடை அளித்தல்'' பற்றிய கருத்தரங்குகளைத் தொடர்ச்சியாகப் பல பாடசாலைகளிலும் நடத்தி வருகின்றது கோப்பாய் வட்டாரத்திலுள்ள பத்தொன்பது பாடசாலைகளையும் உள்ளடக்கியேஇக்கருத்தரங்கு நடத்தப்படுகின்றது.

யாழ். கல்வித் திணைக்களத்தின் மூன்ருந்தவணைப்பரீட்சை டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெறுவதால், 4ந் திகதி ஒழுங்கு செய்த கருத்தரங்கு இரத்துச்செய்வதாயும், கல்வித் திணைக்களப் பரீட்சை முடிவுற்றதும், கருத்தரங்குகள் மீண்டும் விடுமுறை விடும்வரை தொடரும். எனவும் கோப்பாய் கல்வி மூலவளநிலையப்பொறுப்பதிகாரி எஸ்.சி.எஸ் சிதம்பரநாதன் தெரிவித்தார்.

---

### கொடிகாமம் சந்தை

## குத்தகையை ஆட்சேபித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மத்திய சந்தையை அடுத்தவருடம் குத்தகைக்கு கொடுப்பதை ஆட்சேபித்து டிசம்பர் 2-ம் தேதி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்த கொடிகாமம் இளைஞர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபையே சந்தையை நடாத்த வேண்டுமென்றும், சந்தையை குத்தகைக்கு கொடுக்கக் கூடாதென்ற கோரிக்கையையும் முன்வைத்து இந்த ஊர்வலம் நடத்தப்படவிருக்கிறது.

இந்த ஊர்வலத்தில் தென்மராட்சி கிழக்கிழலுள்ள 30 ஸ்தாபனங்கள் பங்கு பற்றவிருக்கிறது. (க)


# சாயி ரெலி ரேப்

புதிய யுக்திகளுடன்

புதுமையான (STEREO) படப்பிடிப்பு

புத்தம் புதிய வீடியோ சாதனங்களுடன் உங்கள் வைபவங்களுக்கு வருகைதந்து உரியமுறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்பவர்கள்.

## சாயி ரெலி ரேப்

★ திருவிழாக்கள் ★ திருமண வைபவங்கள் ★ கும்பாபிஷேகங்கள்
★ குடிபுகு வைபவங்கள் ★ இசை விழாக்கள் ★ அரங்கேற்றங்கள்

இதுபோன்ற அனைத்து வைபவங்களையும் இயற்கை வர்ணக்கலரில்

எழில்மிகு காட்சிகளுடன் ஏற்றமுறையில்

வீடியோ படப்பிடிப்புச் செய்து கொள்ள

சாயி ரெலி ரேப் தொலைபேசி: 23759

விபரங்களுக்கு:

## ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்

141, ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22660

● குறிப்பு: கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சந்திரமோகன் -
ஜெயப்பிரதா
சிரிக்கும்
சலங்கை
ஈஸ்ட்மன்கலர் - புதியபிரதி

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பாலாஜி
என் கடமை
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
மாதர் கூட்டம் திரளும்
3-வது வெற்றி வாரம்!
சிவாஜி-கே. ஆர். விஜயா
ஊரும் உறவும்
வண்ணத்திரை ஓவியம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-15, 1-15,
4-15, 7-15
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றாம் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

வின்ஸர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00
Burt Reynolds
Lesley - Anne Down
in
Rough Cut
Suspense, Robbery,
The crime of a Lifetime
solved by Scotlandyard
Inspector
விரைவில்!
ஆனந்த ராகம்

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
திறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

லிடோ (யாழ். நகர்)
Daily 10-30 a. m. 2-30
4-45, 7-00 only
Jon Voight - Jane Fonda
Coming Home
(adults only)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
அவசரக்
கல்யாணம்

றீகல் (யாழ்நகர்)
தினசரி: 10-30, 2-30,
6-00
ரஜனிகாந்த், ஸ்ரீப்பிரியா
சுமன், சௌகார் நடிக்கும்
தீ
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
புத்தம்புதிய வண்ணப்பிரதி

வெகு விரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

# இன்றைய பலன்

**கார்த்திகை 15-ந் திகதி**
**வியாழக்கிழமை**
**(01-12-83)**

மேடம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும், காதலர் வாழ்வில் இன்று கனிவான தினம், களஸ்திர வழியால் லாபத்திற்கு இடமுண்டு.

இடபம்: சீறி வரும் கோபம் மோதல்களை உருவாக்கும். உணவு விடயத்தில் பக்குவம் வேண்டும். ஆயுத பழக்கத்தை தவிர்க்கவும்.

மிதுனம்: புண்ணிய விருப்பு மேலோங்கும், பிதா வழித்தன வரவுக்கிடமுண்டு, கடமையாற்றும் இடத்தில் ஒத்துழைப்புண்டு.

கடகம்: முயற்சியால் உயர்சியுண்டு, விவசாயிகள் வாழ்வில் முன்னேற்றம் உண்டு, தொழில் மாற்றங்களும் இடப்பிரிவும் உண்டு.

சிங்கம்: சகோதரபாசம் தலை தூக்கி நிற்கும், கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு, பெரியோர் ஆதரவுபெருகும். மகிழ்ச்சியான தினம்.

கன்னி: இன்னலின் பின்னல் முன்னேற்றத்தைத் தடுக்கும், இதயபாரம் வேதனைப் படுத்தும். திட சிந்தையுடன் இருப்பின் நன்று.

துலாம்: வணிகத் துறையில் சமவரும்படிக்கு இடமுண்டு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு இடமழிக்கும்.

விருட்சிகம்: கற்றதனால் பயன் இன்று கிட்டும், கன்னல் மொழிமூலம்காரியங்களைச்சமாளிப்பீர், உடை அணிவதற்கு விருப்புவீர்.

தனுசு: மனையில் சிறுபூசல் தோன்றிமறையும், தனிமையை விரும்புவீர்கள், நண்பர்களே சூழ்ச்சிவலைவிரிப்பர் பொறுமை நன்று.

மகரம்: தாய்வழிப் பொருள் வரவுக்கு இடமுண்டு, உழைப்பினால் முன்னேற்றம் உண்டு. உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு நல்ல தினம்.

கும்பம்: சந்திப்பின் மூலம் பயனுள்ளதொடர்புகள் உண்டு காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும், விருந்து கிடைக்கும்.

மீனம்: போட்டி விவகாரங்களில்மனம் விரயமாகும் ஆணவப்போக்கு அருமையான சந்தர்ப்பத்தை கடத்தும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி—சரிதா
கீழ்வானம் சிவக்கும்
(ஈஸ்மன் கலர்)
2-12-83 முதல்
THE FINAL CONFLICT

## உதைபந்தாட்டம் யாழ். மத்திய கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், யாழ் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.

இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாககொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னணி வீரர்களின் ஆட்டம் ரசிப்பாக இருந்தது இருகோஷ்டிகளும் அடுத்தடுத்து கோல்களை போட்ட வண்ணம் இருந்தார்கள். ஒரு கட்டத்தில் கொக்குவில் கோஷ்டி கோல்களின் எண்ணிக்கையில் முன்னணியில் நின்ற போதிலும், மத்திய கல்லூரியின் வேகமான தாக்குதல்களை, கொக்குவில் பின்னணி வீரர்களாலும், கோல்காப்பு வீரராலும் சமாளிக்க முடியவில்லை.

ஆட்ட முடிவில் யாழ். மத்திய கல்லூரி 5-3 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு, திரு ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார்.

(வி)

## சென்பீற்றர்ஸ் மெதடிஸ்த சபை

பின்வரும் வகுப்புக்களை 1984ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ட்றிமர் மண்டபத்தில் நடத்தும்.

1. பாலர் வகுப்புகள் 31-1-1979ந் திகதிக்குப் பின் பிறந்தவர்கள்.

2. பெண்களுக்கு பாலர் பாடசாலை ஒரு வருட ஆசிரியர் பயிற்சி (ஆங்கிலம் தமிழ்)

3. ஆங்கிலப் பேச்சும், பேச்சுப் பயிற்சியும் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும்

(1ம் வகுப்பு தொடக்கம் 8ம் வகுப்பு வரை)

விண்ணப்பங்கள் பாலர் வகுப்புக்களுக்கும், மற்ற வகுப்புகளுக்கும் 1983 மார்கழி 15க்கு முன் கொடுக்கப்படும்.

இவ்விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செல்வி எம். தம்பையா
இல: 9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
10261

## 1-வது வருட நினைவஞ்சலி



த. இராசையா
தோற்றம்: 1902-10-02
மறைவு: 1982-12-01

எமது இதயங்களில் அழியா ஓவியமாய் நிலைத்து நிற்கும் எமது அன்புத் தெய்வமே உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். துயருடன் நினைவு கூரும்

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

த. இராசையா
அன் சன்
23/10, ஸ்ரான்லிறோட்,
யாழ்ப்பாணம்.
(10216)

JAFFNA COLLEGE
TECHNICAL INSTITUTE

## Vacancy - Librarian

Candidates should have passed at least the first examination in Librarianship conducted by Sri Lanka Library Association,

Salary: Total remuneration will be Rs. 950/- to Rs. 1,300/ per month all inclusive.

Selected candidate must be resident near Vaddukoddai and be prepared to work early and / or late hours (7-30 a. m. to 5-30 p. m.)

Apply with full bio-data to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai to reach before 12th December, 1983. 10250

## பின்னுறுக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ் சென்ற தும்பளை கந்தையா பெண் செல்லமுத்துவின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் தத்துவவிடயமாய்.

மரணமெய்தியவர் நமசிவாயம் கைம்பெண் பொன்னம்மா தும்பளை, பருத்தித்துறை.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்க வழ. இல: 1176.

எதிராக

1. வடிவேலு கைம்பெண் இரத்தினம்
2. வடிவேலு கைம்பெண் கனகம்மா
3. தம்பிராசா கைம்பெண் அன்னபாக்கியம் எல்லோரும் தும்பளை, பருத்தித்துறை.

எதிர்வாதிகள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்குமேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின் முற்றுக்கும் கட்டளைபதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே அக்கறையுள்ள எவரேனும் 1984ம் ஆண்டு தை மாதம் 27ந் திகதி காலை 9-45 மணிக்கு இம் மன்றின் முன் தோன்றி இவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுக்கும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படல் ஆகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்

வரைவு
பா. சுப்பிரமணியம்
மனுதாரின் சட்டத்தரணி.
10229

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

இதன்கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள சந்தை, இறைச்சிக்கடை, சந்தைக்கடைகள் ஆகியவற்றை அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலங்களுக்கு 01-01-1984-ம் திகதி முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 14-12-83-ம் திகதி புதன் கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள், மாநகராட்சி மன்றத்தினால் 13-12-1983-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2-30 மணிவரை வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவங்களைப் பெறுவதற்கு அடையாள அட்டை அல்லது கிராமசேவையாளர் வதிவிடச் சான்றிதழைச் சமர்ப்பித்து குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப் பணமும் கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 50/- செலுத்துதல் வேண்டும். கேள்விப்படிவங்களை உள்ளடக்கும் உறை அரக்கு முத்திரையிடப்பட்டு, உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்விக்கான பெயர் குறிப்பிடப்பட்டு. யாழ். மாநகர ஆணையாளருக்கு விலாசமிடப்பட்டு யாழ் மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டு. அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ். மாநகர ஆணையாளருக்கு 14-12-1983ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான இதர விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுச் கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 23-11-83.

| குத்தகை விபரம் | அட்டவணை குத்தகைக் காலம் | கேள்வி பிணை | நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1. குருநகர் சந்தைக்கடை பிரிவு 'ஊ' மிகுதிக்கடைகள் | 5 வருடம் | 1500.00 | 12,000/- |
| 2. முற்றவெளி ஆட்டிறைச்சிக் கடை இல: 5 | 2 வருடம் | 2500.00 | 21,312/- |
| 3. பண்ணை மீன் சந்தை | 1 வருடம் | 2000 00 | 19 150/- |
| 4. முற்றவெளியில் மாநகர சபை அலுவலகமாகப் பாவிக்கப்பட்ட அறை | 5 வருடம் | 1500.00 | 9000/- |
| 5. பஸ் நிலையக்கடை இல: 31 | 5 வருடம் | 1500 00 | 35,000/- |

(10260)

## கல்குடாத் தொகுதி

# கடற்கரை குடியேற்றத்தை காட்டும் வரை படம்!

## சபையில் லக்ஷ்மன் ஜெயக்கொடி தகவல்!

(இ. கந்தசாமி)

'குடிசன மதிப்பீட்டு திணைக்கள இயக்குனர் ஒருவர் மதுறுஓயா குடியேற்றத் திட்டப் பகுதிக்குச் சென்றிருந்தார். அவரிடமிருந்து ஒரு வரைப்படம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் கல்குடாத் தொகுதியில் கடற்கரையோரப் பகுதி வரை குடியேற்றத்தைக் காட்டும் குறியீடுகள் உள்ளன.'

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகலைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்குதொடர்ந்துபேசியதாவது: 'அந்த குடிசன மதிப்பீட்டு திணைக்கள இயக்குனர் ஏன் மதுறுஓயா குடியேற்றத் திட்டப் பகுதிக்குச் சென்றார்? யார் அவரை அங்கு அனுப்பி வைத்தது? மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஜீப்வண்டியொன்று உட்பட அச்சபையின் வாகனங்கள் சில அவரது பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன இவ்வாறு வாகனங்களும் அவரது உபயோகத்துக்கு வழங்கப்பட்டதன் காரணம் யாது?

'அண்மையிலேயே பெரும் இனப் பிரச்னை தோன்றி அடங்கியுள்ளது இவ்வேளையில் இன்னொரு இனப்பிரச்னையை தூண்டிவிட முயற்சிப்பதா?

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் நிர்வாகம் முழுமையாக இல்லை. இதனால் இம் மாகாணங்கள் இவற்றின் மாவட்ட அமைச்சர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மக்களின் விருப்பத்துக்கேற்றவாறு திட்டங்களோ அல்லது நிர்வாக அலுவல்களோ இப் பகுதிகளில் சீராக மேற்கொள்ளப் படுவதில்லை' என்றார். (கி)

## ஓர் சின்னஞ்சிறுமியை
# காப்பாற்றிய
## ஓர் பெரிய உள்ளம்!

[ராஜகோபால்]

அந்தச் சின்னஞ்சிறுமிக்குத் தன் வீடு எங்கே இருக்கிறது என்று சொல்ல முடியவில்லை!

ஐந்து வயது கூட ஆகாத அவள் கையிலே ஒரு பாலர் வகுப்புப் புத்தகம்! மற்றக் கையிலே பென்ஸில்;

நேற்றுக் காலை எட்டு மணி இருக்கும், ஓட்டுமடம் 'சேர்ச்' ஒழுங்கைக்குள் 'அம்மாஅம்மா, என்றபடி அழுதுகொண்டு நின்ற அச்சிறுமியை ஜெயபாலன், செல்வகுமார் என்ற இரு இளைஞர்களும் கண்டார்கள்!

அந்தச் சிறுமியை விட்டுச் செல்ல அவர்களால் முடியவில்லை.

எப்படியோ அழுகையை நிறுத்தி, 'ஏன் அழுகிறாள்?' என்ற விஷயத்தை அறிய முயற்சித்தார்கள்.

'அன்பரசி' என்பதுதான் அவள் பெயர்! அப்பா வெளிநாட்டில் வேலை அவர் பெயர் சண்முகலிங்கம்! அம்மா திலகவதி.

''நேசரிக்குப் போகும்போது சைக்கிளில் ஒருவன் ஏற்றி அந்தச் சிறுமியின் காதணிகளைக் கழட்டி விட்டு இந்த இடத்தில் கொண்டுவந்து இறக்கியிருக்கிறான். அந்தப் பாவிக்கு எத்தனை கல் நெஞ்சோ...''

இதற்குமேல் அந்த இரு இளைஞர்களாலும் வேறு எதையும் சிறுமியிடமிருந்துதெரிந்துகொள்ளமுடியவில்லை.

சிறுமியின் வீடு எங்கு இருக்கிறது என்று தெரிந்துவிட்டால் பிரச்னையே இல்லை?

எந்த இடத்திலிருந்து சிறுமியை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு அவன் வந்தானோ?

'மோட்டார் சைக்கிள்' வைத்திருந்த ஜெயபாலன் சிறுமியை ஏற்றிக்கொண்டு, செல்வகுமாருடன், யாழ்ப்பாணத்திலுள்ள பதினைந்துக்கு மேற்பட்ட பாலர் பாடசாலைகளில் ஏறி இறங்குகிறார்! கையை விரிக்கிறார்.

சிறுமிக்கு எந்தப் பாலர்பாடசாலை என்று சொல்லமுடியவில்லை.

தனது வீடு 'மஞ்சள் நிறம்' என்று மட்டும் சொல்கிறாள்!

களைத்துவிட்ட இளைஞர்கள்-'ஈழநாடு' காரியாலயத்துக்குச் சிறுமியைக் கூட்டிக் கொண்டுவருகிறார்கள்!

சிறுமியைப் பற்றிச் செய்தி போட்டு எப்படியாவது பெற்றோரை அவளுடன் சேர்த்துவிடவேண்டுமென்பதே ஜெயபாலனின் துடிப்பு!

அலுவலகத்தைவிட்டு அன்பரசியுடன் வெளியேறும்போது, அலுவலகத்தில் பணியாற்றும் சசி சிறுமியுடன் சிறிது நேரம் பேசுகிறார். பேசிய பின்னர் தனது கண்டுபிடிப்பை சசி வெளியிடுகிறார்:

''தனது வீட்டிலிருந்து நல்லூருக்கு நடந்துதான் அச்சிறுமி போவதாகக் கூறுகிறார். அந்தப் பகுதியில்தான் இருக்க வேண்டும்.''

ஜெயபாலன் மோட்டார் சைக்கிளில் அன்பரசியை ஏற்றிக் கொண்டு நல்லூர் கந்தசாமி கோவிலடிக்குப் பறக்கிறார்!

அதன்பின்னர், சிறுமிக்கு தன்வீட்டைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை!

பிள்ளையைக் காணாது தவித்துக் கொண்டிருந்த தாயார், அன்பரசியைக் கட்டிப் பிடித்து அழுதார்.

காலை எட்டு மணி முதல், பகல் ஒருமணிநேரம்வரை தன் குழந்தைக்காக நேரத்தைச் செலவு செய்த ஜெயபாலனுக்கும், செல்வகுமாருக்கும் அந்த தாயுள்ளம் கண்ணீரால் நன்றி சொன்னது.

## சரோஜினி கொலை வழக்கு;
# சாட்சி வராததினால்
# விசாரணை ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

சரோஜினி கொலை வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சி வராததினால் ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில், இளநொச்சி கனகாம்பிகை குளத்தில், முகமட் முகதின் அல்லது வீரையா என்பவர் 5 வயதான சரோஜினியைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம், சட்டத்தரணிகள் ரி. லிங்கராஜா, திருமதி குலநாயகி ரட்ணபாலன், ரி. தனராஜசிங்கம், கே. தவரேந்திரன், எஸ்.ஏ.ஈ. ஏகநாதன், கே. அரியநாயகம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். சி. ஸ்ரீஸ்கந்தராசா ஆஜரானார். விசாரணை 84 ஏப்ரல் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திரு. கே. வி. சண்முகநாதன்

யாழ்ப்பாணம் அந்நிய காலச்சங்கத்தைச் சேர்ந்த திரு. கே. வி சண்முகநாதன் காலமானார். அன்னார் திருமதி தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சந்திரப் பிரேமா (தாதிய உத்தியோகத்தர், அரசினர் வைத்திய சாலை-யாழ்ப்பாணம்), சந்திரகாந்தன் (டோகா), லோகேஸ்வரன் (ஆசிரியர், மடுக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - பூவரசங்குளம்), தில்லேஸ்வரன், விஜயநாதன், நிசானி ஆகியோரின் பாசத் தந்தையுமாவார். அவர் காலஞ்சென்ற விசயரத்தினம்-இராஜமணி தம்பதியின் மருமகனும், திருமதி வி. சரஸ்வதியின் பெருமனுமாவார் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓவசியர்), அசலாம்பிகை, மகாலிங்கம் (பிலிப் நேசிங் ஹோம்), கமலாம்பிகை (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி-யாழ்ப்பாணம்), ஞானம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். துரையப்பா (வைத்தியர்), பாலசுப்பிரமணியம் (உதவிப் புகையிரதநிலைய அதிபர்), காமாட்சி அம்மா, ருக்மணி, இராஜகுலசிங்கம், யோகவதி, குணராசா (செங்கை ஆழியான்), பத்மநாதன் (பிரான்ஸ்), லலிதாதேவி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். இறுதிக்கிரியைகள் அன்னாரின் 38, இலக்க பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து, இன்று வியாழக்கிழமை (1-12-83) பிற்பகல் 4 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (10284)

## இன்றைய விடிவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டணியின் நிலை. தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றுத் திட்டமாக இதனை ஏற்றுக்கொள்ள கூட்டணிதயாராகவிருக்கிறது. இது சாத்தியமாகும் பட்சத்தில், அவசியம் என்று கருதப்பட்டால், அம்பாறையை முஸ்லிம்களுக்கு வழங்கவும்; வவனியாவில் சிங்களவர்கள் உள்ள பகுதியை அவசியம் ஏற்பட்டால் அவர்களுக்கு வழங்கவும் உத்தேசம் கூட்டணிக்கு உண்டு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி உத்தியோகமொழியாக சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் இரு மாகாணங்களையும் இணைப்பதில் தவறு இல்லையே என்பது கூட்டணி நிலை இணைப்பு விஷயத்தில் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் மக்களின் முடிவையும் அறிய வேண்டும்'' என்று அமைச்சர் தெரிவித்தார்.

### கூட்டணியைப் பலப்படுத்த.....

இப்பொழுது நடைபெறும் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளில் சுமுகமான தீர்வுகாணப் படாவிட்டபல் பேச்சுக்கள் மீண்டும் தொடருமா என்று கேட்டபோது அமைச்சர் பின்வருமாறு விளக்கினார்.

''பேச்சுவார்த்தைகள் இத்துடன் முடியப் போவதில்லை. தொடர்ந்தும் நடைபெறும். திரு. ஜி. பார்த்தசாரதி மீண்டும் இலங்கை வரலாம்.

''இப்பொழுது கிடைத்திருப்பது ஓர் அரிய சந்தர்ப்பம். இதனை நழுவ விடக் கூடாது வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதைக் கூட்டணி கருதி நடக்கவேண்டும்.

''இந்தப் பேச்சுவார்த்தைகளில் நான் கலந்து கொண்டது, தமிழர் கூட்டணியின் கையைப் பலப்படுத்தவே. இப் பேச்சுக்கள் முறிந்துபோனால் கஷ்டங்கள் தொடரலாம்'' என்றார் அமைச்சர்.

தமிழக முதல் அமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், கலைஞர் மு கருணாநிதி ஆகியோருடன் நிகழ்ந்த சந்திப்பு பற்றிக் கேட்டபோது;

''ஈழத்தமிழருக்குக் குரல் கொடுக்க, உதவிக் கரம் நீட்ட எப்பொழுதுமே நான் தயார். உங்களது தியாகத்தில்தான் எதிர்காலம் உண்டு'' என்று தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் கூறினார். திரு மு. கருணாநிதியை நான் சந்தித்தபோது, தமிழ் ஈழம்தான் தீர்வு என்றார்''

இவ்விதம் கூறிய அமைச்சர் தொண்டமான்—

''இனக் கலவரங்களால் பாடம்புகட்டலாம் என்று, நினைத்தவர்கள் பிரச்னையையே தோற்றுவித்துவிட்டார்கள். சிங்களவர்கள் பாடம் கற்று முழுநாடே பாடம் படிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. இலங்கையின் 'இமேஜ்' சர்வதேச ரீதியில் கெட்டுப்போய் விட்டது. இதனைச் சரிக்கட்டுவது இலேசான காரியமல்ல'' என்று தெரிவித்தார்.

பேட்டியை முடித்துக்கொள்ளும்போது அவர் வெளியிட்ட நம்பிக்கை, ''நல்ல சூழ்நிலை; எதிர்பாராத திருப்பம் பிராந்திய சுயாட்சிக்கு வழிகோலும் திட்டங்கள் நிறைவுபெறும்''.

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி 509·6

(கொழும்பு)

கடந்த மாத வாழ்க்கைச் செலவுப்புள்ளி 509 6 என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இடைத் தேர்தல்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்குமாறு தேர்தல் திணைக்களம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியிருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் திணைக்களங்களிலும் தேர்தல் நடைபெறுவதற்கான வேலைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

முன்னர் தேர்தல் நடைபெற்ற வாக்குச் சாவடிகளை, வரவிருக்கும் தேர்தலுக்கும் பாவிக்கும் முகமாக அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு வருவதாகவும் தெரிய வருகிறது. (க-மா)

## கூட்டணியின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும், வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரே மாநிலமாக்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

அதேவேளை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று தாயகம் திரும்புவதற்கு முன்னர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாமென்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் இன்று சந்திப்பதற்கு முன்னர் இலங்கைத் தமிழர்பிரச்னை குறித்து இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ்வும், இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி எஸ். ஹமீதும் இன்றுசந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

### பிந்திய செய்தி

ஜனாதிபதி திரு. ஜே, ஆர். ஜெயவர்த்தன இலங்கைத் தமிழர் பிரச்னைதொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை நேற்றிரவு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பிற்கு முன்னர் இலங்கை, இந்திய வெளிநாட்டமைச்சர்கள் சந்தித்து இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். (வெ)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இம்மகாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இராஜனார்த்தனன் இந்த மகாநாட்டை ஏற்பாடு செய்துள்ளார். (வெ)

## யுனிசெவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான விபரங்களைத் திரட்டுமாறு பணித்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் சேரிகள் புனரமைக்கப்பட்டு, வீடுகள் அமைக்கவும், பொதுக் கிணறு, மலகூடங்கள், வாய்க்கால் அமைக்கவும் குடிநீர் வசதி செய்யவும், பெண்களுக்கு வருமானம் தரக்கூடிய சிறுகைத்தொழில்களை ஆரம்பிக்கவும் முடியும்.

கடந்த அக்டோபர் மாதம் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், யாழ் மாநகரசபையின் தேவைகள்பற்றி பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவிற்குத் தெரிவித்திருந்தார். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.